வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 29.10.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 328 | பக்கங்கள் : 16




# கோட்டாபயவுக்கு எதிராக நவ. 1 லண்டன் தமிழர்கள் போராட்டம்

## பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாட்டில்

லண்டன், ஒக்ரோபர் 29

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரிட்டன் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்கொட்லாந்து நகரில் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி திங்கட்கிழமை மாபெரும் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் இந்த எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. 15




## மேலும் 22 பேர் ஒரே நாளில் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 29

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 22 பேர் உயிரிழந்தனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 09 ஆண்களும், 13 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்தவகையில், 30 வயதுக்குட்பட்டவர் 15

## பார்த்தீபனிடம் ஐந்து மணி நேரம் ரி. ஐ. டி. விசாரணை!

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். மாநகர உறுப்பினர் பார்த்தீபனிடம் பயங்கரவாத தடுப்பு பொலிஸார் நேற்று ஐந்து மணி நேரம் விசாரணை நடத்தினர்.

யாழ். மாநகரில் தண்டப் பணம் அறவிடும் நடைமுறையை கையாள்வதற்காக அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர உத்தியோகத்தர்கள் ஐவருக்கும் சீருடையை வடிவமைத்து பெற்றுக்கொடுத்தமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக பயங்கரவாத தடுப்பு பொலிஸாரால் 15

## 540 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஒக். 29

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 540 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண் 15

## திருமலை - கே.கே.எஸ். - புத்தளம் கடற்பரப்புகளுக்கு செல்லாதீர்கள்

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 29

கிழக்கு கடற்பரப்பில் தற்போது குறைந்த காற்றமுத்த தாழ்வு பகுதி உருவாகியமையால் திகோணமலையிலிருந்து காங்கேசன்துறை ஊடாக புத்தளம் வரையான கடலோர பகுதிகளில் மீனவர்கள், கடற்படையினர் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித் 15

## பேருந்து, ரயில் சேவைகள் நவ. 01 முதல் வழமைக்கு!

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஒக். 29

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பொதுப் போக்குவரத்து சேவைகளை வழமையான கால அட்டவணையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட் 15

## சுதந்திர தமிழீழத்தை உருவாக்க விரும்பினால் அதற்கும் நாம் தயார்!

யாழ்ப்பாணம், ஒக். 29

தனி நாடு, சுதந்திர தமிழீழத்தை உருவாக்க விரும்பினால் அதற்கும் நாங்கள் தயாராகவே உள்ளோம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் 15



## வவுனியாவில் 17 பேர் உட்பட வடக்கில் 30 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஒக். 29

வவுனியா மாவட்டத்தில் 18 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 30 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் நேற்று 159 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர். 15

## சி.ஐ.டிக்கு பதிலளிக்க கால அவகாசம் கோரினார் அருட்தந்தை சிறில் காமினி

கொழும்பு, ஒக். 29

காணொளி மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த அருட்தந்தை சிறில் காமினி, தமக்கு ஒரு வார கால அவகாசத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி 15








உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# சீனி இறக்குமதிக்கு டொலரை வழங்குக!

## அமைச்சரிடம் கோரிக்கை

கொழும்பு,ஒக். 29

சீனி இறக்குமதி செய்வதற்கு தேவையான டொலரை வங்கிகளுக்கு விநியோகிக்குமாறு சீனி இறக்குமதியாளர்களால் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டொலரை விநியோகிக்கும் பட்சத்தில் உரிய முறையில் சீனி இறக்குமதி செய்யப்படுவதுடன், நிர்ணய விலையிலும் சீனியை விற்பனை செய்ய முடியும் என சீனி இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உப தலைவர் நிஹால் செனவிரத்ன குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் மற்றும் சீனி இறக்குமதியாளர்கள் இடையே நேற்று முன்தினம் மாலை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதனிடையே, சீனிக்கான கட்டுப்பாடு விலை அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் சில பகுதிகளில் அதிக விலையில் சீனி விற்பனை செய்யப்படுகின்றது.

வெள்ளைச் சீனி ஒரு கிலோகிராம் 122 ரூபாய்க்கும் சிவப்பு சீனி ஒரு கிலோகிராம் 125 ரூபாய்க்கும் விற்பனை செய்ய வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபை அண்மையில் அறிவித்திருந்தது.




# கொழும்பு துறைமுகநகரில் மணல்திட்டு பந்தய பாதை!

## நேற்று திறந்துவைக்கப்பட்டது

கொழும்பு, ஒக். 29

கொழும்பு துறைமுக நகரில் மணல் திட்டுகளை கொண்டு நிர்மாணிக்கப்பட்ட ஏ.ரி.வி வாகன பந்தய பாதைகள் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

இவை, இலங்கையின் முதலாவது மணல்திட்டு பந்தயப் பாதைகளாகும்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோரினால் நேற்று இவை திறந்து வைக்கப்பட்டன.

கொழும்பு டூன்ஸ் பந்தய மைதானம் என பெயரிடப்பட்ட இந்த பாதை, துறைமுக நகரத்தில் 05 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. திறப்பு விழாவில் அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ, பிரசன்ன ரணதுங்க, சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், அமைச்சர்கள் மணல் சாலை வழியாக வாகனங்களை செலுத்தினர்.

(அ)

# புதுக்குடியிருப்பு பகுதியில் 11 ஏக்கர் காணி விடுவிப்பு



முல்லைத்தீவு, ஒக். 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பகுதியில் இராணுவ வசம் இருந்த 11 ஏக்கர் காணிகள் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 7ஆம் வட்டாரப் பகுதியில் இதுவரை இராணுவப் பயன்பாட்டில் உள்ள 11 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்குரிய ஆவணத்தை முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் பிலப்பிட்டிய மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதனிடம் நேற்று உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை அமைந்திருந்த காணி தவிர்ந்த ஏனைய புதுக்குடியிருப்பு நகரத்துக்கு அண்மையாகவுள்ள மக்களின் காணிகளே நேற்று விடுவிக்கப்பட்டன. பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை இருந்த காணி தொடர்ந்தும் இராணுவத்தினர் வசமே உள்ளது.

தமக்கு சொந்தமான காணிகளை விடுவிக்குமாறு கோரி 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் காணி உரிமையாளர்களால் குறித்த இராணுவ முகாமுக்கு முன்பாக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதன் பயனாக ஏழு ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் மேலதிக காணியில் இராணுவம் தொடர்ச்சியாக நிலைகொண்டிருந்தது.

682ஆவது படைப்பிரிவு தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்த் மற்றும் காணிப்பகுதி அதிகாரிகள்,கிராமசேவையாளர் மற்றும் 68 ஆவது படை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்!

கொழும்பு, ஒக். 29

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்க உள்ளிட்ட 02 பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கும், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 6 பேருக்கும் உடன் அமுலாகும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

(அ)

# இந்திய மீனவர்கள் 23 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 29

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 13ஆம் திகதி வடமராட்சி கடற்பரப்பில் இரண்டு படகுகளில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 23 பேர் இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்றது.

அந்த மீனவர்கள் 23 பேரையும் காரைநகர் கடற்படை முகாமில் தடுத்துவைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்களின்

படகுகள் இரண்டும் மயிலிட்டித் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

கல்வி tv CHANNEL-1

**29.10.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மறுஒளிபரப்பு |
| | | அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**29.10.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
29.10.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## சீனா வேண்டும் - அமெரிக்கா வேண்டாம்

மின்சார சபை ஊழியர்கள் தொழில்சங்கம், பெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதனால், நாடு சில தினங்கள் இருளில் மூழ்கக்கூடுமென்றும் குறிப்பிடப்படுகின்றது. கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகள் அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டதை இரத்துச் செய்யுமாறு கோரியே, இவ்வாறானதொரு போராட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளனர். இதற்கு பின்னால் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளும் இருக்கின்றன எனத் தெரிகின்றது. ஏனெனில், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் குறித்த விடயத்தில் அரசாங்கத்தின் முடிவை எதிர்க்கின்றன. இந்தப் பின்னணியில்தான் மின்சார சபை ஊழியர் தொழில்சங்கம் இவ்வாறானதோர் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் இதேபோன்றதொரு தொழில்சங்க போராட்டம் இடம்பெற்றது. கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்குவதை எதிர்த்து, துறைமுக தொழில் சங்கங்கள் போராட்டங்களில் இறங்கின. இதனைத் தொடர்ந்தே, 2017இல் முன்னைய அரசாங்கம், இந்தியாவுடன் செய்துகொண்ட உடன்பாட்டை அரசாங்கம் கைவிட்டது. இதனால், புதுடில்லிக்கும் - கொழும்புக்குமான உறவில் நெருடல் ஏற்பட்டது. பின்னர், இதனை சமாளிக்கும் வகையிலேயே மேற்கு கொள்கலன் முனையத்தை வழங்கும் விருப்பத்தை அரசாங்கம் வெளியிட்டது. அந்த உடன்பாடே அண்மையில் பூர்த்திசெய்யப்பட்டது.

கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிறுவன விடயத்திலும் இப்படியானதொரு நாடகம்தான் அரங்கேறுகின்றதா? தொழில்சங்கங்களின் எதிர்ப்பை காரணம் காட்டி, அமெரிக்க நிறுவனத்துடனான உடன்பாட்டையும் அரசாங்கம் கைவிடுமா?

இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம். அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டது. அப்போது அதற்கு எதிராக நாடு தழுவிய தொழில்சங்க போராட்டங்கள் எவையும் இடம்பெறவில்லை. துறைமுக நகர சட்ட மூலம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை. ஆனால், இந்தியாவின், அமெரிக்காவின் திட்டங்கள் தொடர்பில்தான் மிகப்பெரும் எதிர்ப்புக்கள் வெளியிடப்படுகின்றன. இதனை இந்திய, அமெரிக்க தரப்புக்கள் துல்லியமாக விளங்கிக் கொள்ளாமல் இருக்காது. தொழில்சங்க எதிர்ப்பு என்பது – ஒரு திட்டமிட்ட தந்திரோபாய நடவடிக்கையாக இருக்கின்றதா அல்லது உண்மையிலேயே தொழில்சங்கங்கள் சுயாதீனமாக இவற்றை திட்டமிடுகின்றனவா? கிழக்கு கொள்கலன் முனைய விடயத்தின்போது மேற்கொள்ளப்பட்ட தொழில்சங்க எதிர்ப்புக்கள், மிகவும் திட்டமிட்ட வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமையை காணக்கூடியதாக இருந்தது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் பெருமளவு நன்கொடைகளை தென்னிலங்கைக்கு வழங்கிவருகின்றன. அமெரிக்க உதவி நிறுவனம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் பெருமளவு நிதியை கொழும்பு மைய அரசு சாரா நிறுவனங்களுக்கு வழங்குகின்றன. அவற்றோடு ஒப்பிட்டால் வடக்கு, கிழக்கில் இயங்கும் அமைப்புகளுக்கு பெரியளவில் நிதியுதவிகளை குறித்த நிறுவனங்கள் வழங்குவதில்லை. இவ்வாறு பெருமளவு நிதியை கொழும்பு மைய நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம், தென்னிலங்கையை தாராளவாத போக்கிற்குள் கொண்டுவர முடியுமென்று, மேற்குலகம் கணித்திருக்கலாம். ஆனால், இதுவரையில் அந்த முயற்சி பெரிதாக வெற்றியளித்ததாகக் கூறமுடியாது. இதனையும் அமெரிக்க மற்றும் மேற்குலக தரப்புக்கள் புரிந்துகொள்ளாமல் இருக்க வாய்ப்பில்லை. அதேவேளை மேற்குலக நிதியுதவிகளை பெறும் கொழும்பு மைய அரசு சாரா நிறுவனங்கள் எவற்றாலும் தென்னிலங்கை அரசியலில், பெரியளவில் செல்வாக்குச் செலுத்த முடியவில்லை என்பதும் இப்போது தெளிவாகவே தெரிகின்றது.

தென்னிலங்கையின் அரசியல் போக்கை அவதானித்தால் ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, சீனா என்றால் மகிழ்ச்சி – அமெரிக்கா, இந்தியா என்றால், வெறுப்பு. இது ஓர் இயல்பான சிங்கள - பௌத்த தேசியவாத போக்காகவே இருக்கின்றது.

# புலம்பெயர்ந்த தமிழர்களை பேச்சுக்கு அழைத்த ஜனாதிபதிக்கு லண்டன் தமிழர்களின் பதிலடி!

- அலசுவது இராஜதந்திரி -

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குபற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ கடந்த மாதம் நியூயோர்க் சென்றிருந்தபோது புலம்பெயர்ந்த தமிழர்களுடன் இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னைகள் தொடர்பாக பேச்சுகள் நடத்தத் தாம் தயாராக இருப்பதாக கூறியிருந்தார்.

ஜனாதிபதி புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேச்சு நடத்த முன்வந்தமை வரவேற்புக்குரியதாகவும் கருதப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் 200 தமிழர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ மற்றும் வடக்கு - கிழக்கு யுத்தம் இறுதிக் கட்டத்தை எட்டியபோது ஆயுதப் படைகளின் முக்கிய தளபதிகளாக இருந்து யுத்த நடவடிக்கைகளை கையாண்டவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன்பாக நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

புத்த பகவானின் போதனைகளில் முக்கியமாக எப்போதுமே விதந்துரைக்கப்படுவது: "சூரியன், சந்திரன், உண்மை ஆகியவற்றை எந்த ஒரு சக்தியாலும் ஒருபோதும் மறைத்து விட முடியாது" என்பதாகும்.

இவ்வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ சர்வதேச கவனத்தை தன்பால் ஈர்க்கவும், புலம்பெயர்ந்த தமிழர்களின் நல்லெண்ணத்தை பெறும் விதத்திலும் தாம் புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேச்சுக்களுக்கு தயாராக இருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்லாம்.

ஆனால், புலம்பெயர்ந்த தமிழர்களில் அநேகர் லண்டனில் மட்டுமல்ல. ஐரோப்பா, ஸ்கன்டிநேவியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். எண்பதுகளுக்கு முன்னர் லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதென்பது வியப்புக்குரியதாக இருந்தது. ஆனால், இன்று வடக்கு - கிழக்கில் எங்கிருந்தும் உலகின் எப்பகுதியுடனும் தொடர்புகளை எவ்வேளையிலும் கொண்டிருக்கும் விதத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் லண்டனிலும் ஐரோப்பாவிலும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். இதுதவிர, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலும் இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ நியூயோர்க் நகரில் வைத்து புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேச தயாராக இருக்கிறார் என்று தெரிவித்தமைக்கு பதிலளிப்பது போலவே தற்போது லண்டனிலுள்ள இருநூறு தமிழர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ நிறுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளனர்.

புலம்பெயர்ந்த தமிழர்களை பொறுத்தவரை தமது உறவுகளை வடக்கு - கிழக்கு யுத்தங்களில் பறிகொடுத்தவர்களாகவும் சொத்து, சுகங்களை யுத்தக் கெடுபிடிகளில் இழந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்த தறுவாயில் வன்னியில் இராணுவத்தினரின் வேண்டுகோளுக்கமைய சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏராளமானதாகவே இருக்கின்றது.

வடக்கு - கிழக்கு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்‌ஷ இருந்தபோது அவரின் சகோதரரும் இன்றைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்‌ஷ பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றியிருந்தார்.

ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்‌ஷ நிறைவேற்றதிகாரத்தைக் கொண்டிருந்தபோதிலும், இறுதிக்கட்ட யுத்தத்தை முழு அளவில் நடத்தி முடிக்கும் விதத்தில் சகல அதிகாரங்களையும் தமது சகோதரரும் அன்றைய பாதுகாப்பு செயலாளருமான கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு வழங்கியிருந்தார்.


இந்நிலையில், அன்று கோட்டாபய ராஜபக்‌ஷ இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற வன்னிப் பகுதியில் நடந்தேறிய சகல யுத்த நடவடிக்கைகள் மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் என்பவற்றுக்கு பொறுப்புக்கூற வேண்டியவராக இருக்கின்றார்.

அன்று, இராணுவத்தின் பிரதம தளபதியாக இருந்தவரும் இன்றைய பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்ற பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாகூட இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சில அத்துமீறல்கள் இடம்பெற்றுள்ளமையை ஒப்புக்கொண்டுள்ளார்.

இத்தகைய பின்னணியில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ உட்பட அன்று ஆயுதப்படை பிரதானிகளாக இருந்த பலரும் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற அத்துமீறல்கள் தொடர்பாக பதிலளிக்க வேண்டியவர்களாகின்றனர். இதன்மூலமே புலம்பெயர்ந்த தமிழர்களோடு மட்டுமல்ல. வடக்கு - கிழக்கு பிரச்னையோடு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் ஜனாதிபதியினால் அப்பழுக்கற்ற பேச்சுக்களை நடத்த முடியும்.

இல்லையேல் லண்டன் வாழ் புலம்பெயர்ந்த தமிழர்கள் மட்டுமல்ல. ஏனைய நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்களும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ குறித்து நீதி கோரும் நடவடிக்கைகள் மேலும் பலமடையுமென்றே கருதலாம். •

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
குழந்தைகளால் குடும்பத்தில் நல்ல விஷயங்கள் நடைபெறும். பழைய நண்பர்களை சந்தித்துப் பேசுவதால் மகிழ்ச்சி கூடும். சிறு உழைப்பு பெரிய நன்மை. புதிய நபரின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்**
உங்களின் முயற்சியால் சில நல்ல பலன்களை காண்பீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த ஆறுதல் கிடைப்பதால் மகிழ்வீர்கள். தன்னம்பிக்கையின்றி இருந்த நீங்கள் மெல்ல அதிலிருந்து மீளுவீர்கள்.

**மிதுனம்**
பழைய தவறுகளால் ஏற்பட்ட உறுத்தல் நீங்கி நிம்மதி. உயர்அதிகாரி ஒருவரின் அன்பும், ஆதரவும் உங்களுக்கு கிடைக்கும். உங்களின் தனி முயற்சியால் பணியில் முன்னேற்றம் உண்டு.

**கடகம்**
வாழ்வில் முன்னேற நண்பர் உங்களுக்கு கற்றுக் கொடுப்பார். வாழ்வில் உதாரணமாக நினைப்பவரை சந்தித்து மகிழ்வீர்கள். மகிழ்ச்சியான சூழல் இருக்கும். புதிய மாற்றம் உண்டாகும் நாள்.

**சிம்மம்**
மாணவர்களின் முயற்சிகள் சாதனையாக மாறக் கூடும். பணியாளர்கள் சிரமமான விஷயங்களையும் எளிதாக முடிப்பார்கள். உங்களின் இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம்.

**கன்னி**
உங்கள் திறமை தரும் வெற்றியால் புகழ் அதிகரிக்கும். எதிர்காலத் திட்டம் உருவாகும். தம்பதி இடையே புரிதல் ஏற்படும். தந்தையுடன் இருந்த வருத்தம் நீங்கி சுமுக உறவு ஏற்படும்.

**துலாம்**
வாகனத்தை சீர் செய்வீர்கள். ரகசியம் ஒன்று தெரிய வரும். முந்தைய சண்டை சச்சரவுகள் தீர்ந்து நிம்மதி ஏற்படுத்தும். உங்களின் பொறுப்புகளை பிறர் பகிர்ந்து கொள்வது ஆறுதல்.

**விருட்சிகம்**
சிலருக்குப் புது வாகனம் வாங்கக்கூடிய யோகம் ஏற்படும். நீங்கள் எதிர்பார்த்தபடியே அரசின் உதவிகள் எளிதில் கிடைக்கும். பலரது ஒத்துழைப்பால் நன்மை ஒன்று நிகழும். கனவு நனவாகும்.

**தனுசு**
சிந்தித்து சிறந்த முடிவுகளை எடுத்து மேலும் வெற்றி அடைவீர்கள். உங்களின் செயலால் உங்களுக்கே சிரமம் வராதபடி கவனமாயிருங் கள். பணியாளர்களுக்கு பதவி, சம்பள உயர்வு உண்டு.

**மகரம்**
முன்பு செய்த பயணம் ஒன்றின் பலனாக நன்மை விளையும். கடந்த கால அனுபவத்தால் உங்களை மாற்றிக் கொள்வீர்கள். கோபத்தால் நன்மையை இழக்காதபடி கவனம் தேவை.

**கும்பம்**
புதிய வாய்ப்பு உங்களை தேடிவரும். எதிர்பார்த்த நன்மை உண்டாகும். கோபத்தை அடக்கிக் கொண்டு வெற்றியடைய முயலுங்கள். உங்களால் நண்பர்களுக்கு சில நன்மைகள் உண்டாகும்.

**மீனம்**
இளைஞர்கள் வெற்றி பெற்று மகிழ்ச்சியடையும் நாள். உங்கள் திறமைக்கு ஏற்ற அங்கீகாரத்தை பெற்று மகிழ்வீர்கள். நகை வாங்குவீர்கள். வெளிநாட்டு தொடர்பு நன்மை தரும்.

# ஜெயலலிதா மரணம் குறித்த வழக்கை திசைதிருப்ப அப்பலோ நிர்வாகம் முயற்சி

## உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் வாதம்

சென்னை, ஒக். 29

ஜெயலலிதா மரணம் குறித்த வழக்கில் விசாரணை முடிந்து அறிக்கை தாக்கல் செய்யும் முன்பே, ஆறுமுகசாமி ஆணையம் ஒருதலைபட்சமாகச் செயல்படுகிறது என்று எப்படிச் சொல்ல முடியும் என உச்ச நீதிமன்றம் அப்பலோ மருத்துவமனை நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பியுள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரணை நடத்த ஆறுமுகசாமி ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் முன் ஆஜராவதிலிருந்து விலக்கு கேட்டு ஜெயலலிதா சிகிச்சை பெற்ற அப்போலோ மருத்துவமனை தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த வழக்கு செவ்வாய் கிழமை விசாரணைக்கு வந்த போது, ஜெயலலிதா மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த சமயத்தில் அ.தி.மு.க. அரசு சொல்லிதான் சி.சி.டி.வி. கமராக்கள் அகற்றப்பட்டன



என்று கூறி அப்போலோ நிர்வாகம் பரபரப்பை ஏற்படுத்தியது. அதோடு ஜெயலலிதா மருத்துவமனைக்கு சேர்க்கஅழைத்து வரும்போது மயக்கநிலையில் இருந்தார் என்று தெரிவித்தது.

இந்த நிலையில் வழக்கு இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது தமிழக அரசு சார்பில் வழக்கறிஞர் அரிஸ்டாட்டில் ஆஜரானார். அவர் தன் வாதத்தில், “ஆறுமுகசாமி ஆணையம் அனைத்து விசாரணையையும் முடித்த பின்பு முதலில் அறிக்கையைச் சமர்ப்பிக்கும். அதுவும் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முழுமையாக அரசால் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அதன் பிறகு தான் பொதுவெளியில் வெளியிடப்படும். ஆனால், அதற்கு முன்னதாகவே ஆறுமுகசாமி ஆணையம் ஒருதலைபட்சமாகச் செயல்படுகிறது என்ற அப்போலோ மருத்துவமனையின் குற்றச்சாட்டை எப்படி ஏற்க முடியும்?

இது போன்ற வாதங்களை தற்போது நீதிமன்றத்தில் முன்வைப்பது வழக்கைத் திசை திருப்பும் செயலாகும். விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டு ஓராண்டு விசாரணைக்கு ஆஜரான பின்னர்தான் அப்போலோ சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் அப்போலோ மருத்துவர்கள் 50இற்கும் மேற்பட்டோர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பாக விசாரிக்கப்பட்டனர்” என்று தெரிவித்தார்.

இதை விசாரித்த நீதிபதிகள், மருத்துவமனை தரப்பில் இப்போதே ஒருதலைபட்சம் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி வழக்கை ஒத்திவைத்தனர்.

# முல்லை பெரியாறு அணை விவகாரத்தில் இரு மாநில நலனும் பாதுகாக்கப்படும்

## தமிழக முதல்வர் ஸ்டாலின் கேரள முதல்வருக்கு உறுதி

சென்னை, ஒக். 29

“முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக இரண்டு மாநில மக்களின் நலனும் பாதுகாக்கப்படுவதை தமிழ்நாடு அரசு உறுதி செய்யும்” என உறுதியளித்து கேரள முதல்வர் பினராயி விஜய னுக்கு தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

மேலும், அக்கடிதத்தில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரள மாநில மக்களுக்கு உதவுவதற்கு தமிழ்நாட்டின் எல்லையோர மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தைப் பொருத்தவரை, நாங்கள் அணையின் நீர்மட்டத்தைக் கூர்ந்து கவனித்து வருகிறோம். எங்களின் அதிகாரிகளும்



தொடர்ந்து கேரள அரசுடன் இது தொடர்பான தகவல் பரிமாற்றத்தில் இருக்கின்றனர். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டமானது உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அனுமதிக்கப்பட்ட அளவிலேயே உள்ளது. அதேபோல் மத்திய நீர் ஆணையத்தின் விதிகளின் படியும் உள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நான் பேசியுள்ளேன். அணையில் நீர்மட்டத்தைத் தொடர்ந்து கூர்ந்து கவனிக்குமாறும், அணையில் இருந்து நீர் வெளியேற்றத்தை முறையே திட்டமிட்டு செயல்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளேன்.

அதேபோல், அணையின் நீர்மட்டம் மற்றும் நீர் வெளியேற்றம் தொடர்பான தகவல்களை எனக்கு முன் கூட்டியே தெரிவிக்குமாறும் உத்தரவிட்டுள்ளேன். அதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் சரியான தருணத்தில் மேற்கொள்ள முடியும்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தைப் பொறுத்தவரை தமிழக அரசானது, இருமாநில மக்களின் நலனை, பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு முடிவுகளை எடுக்கும் என்று மீண்டும் உறுதியளிக்கிறேன்” என முதல்வர் ஸ்டாலின் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# எடப்பாடியை அ.தி.மு.கவை விட்டு நீக்கி ஒற்றை தலைமையை உருவாக்க வேண்டும்

## வலியுறுத்துகின்றார் முன்னாள் மாநில செயலாளர்

சென்னை, ஒக். 29

எடப்பாடி பழனிசாமியை அ.தி.மு.கவை விட்டு நீக்க வேண் டும் என்றும் சசிகலா அல்லது ஓ.பி.எஸ் அ.தி.மு.கவின் ஒன்றைத் தலைமையாக வேண்டும் என்றும் முன்னாள் அ.தி.மு.க. பெங்களூர் மாநில செயலாளர் புகழேந்தி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்ஷபட்ட பெங்களூர் மாநில செயலாளர் புகழேந்தி சென்னை உயர்நீதிமன்ற நுழைவாயிலில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர், “அ.தி.மு.க. சரிவை நோக்கி சென்று கொண்டிருப்பதால் ஒருங்கிணைப்பாளர் ஓ.பி.எஸ். சரியான முடிவை எடுக்க வேண்டும், எடப்பாடி பழனிசாமியை கட்சியை விட்டு நீக்கி சசிகலா அல்லது ஓ.பி.எஸ். அ.தி.மு.கவின் ஒற்றைத் தலைமையாக பொறுப்பேற்க வேண்டும்” என வலியுறுத்தினார்.

“எடப்பாடி பழனிசாமியை முதல்வராக்கிய போது நல்லவராக இருந்த சசிகலா இப்போது கெட்டவராக தெரிகிறார்” எனக்கூறிய புகழேந்தி, ஒருங்கிணைப்பாளர் ஓ.பி. எஸ்ஸூக்கு எதிராக முனுசாமி போன்றவர்கள் கருத்து கூறுவது ஏற்புடையதல்ல என்றார்.

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக சசிகலா தன்னை கூறிவரும் நிலையில், அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் உள்ளிட்டோர் இதற்கு கடும் கண்டனங்களை தெரிவித்திருந்தனர். இந்நிலையில், அ.தி.மு.கவில் சசிகலாவை சேர்ப்பது தொடர்பாக ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கூறியதையடுத்து கட்சிக்குள் முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

# மற்றொரு கொரோனா அலை நாட்டில் ஏற்படும் அபாயநிலை

## 3 ஆவது டோஸை உடனே வழங்குமாறு ஜனாதிபதிக்கு மருத்துவர் சங்கம் கடிதம்

**கொழும்பு, ஒக்.29**

**இலங்கையில் கொரோனா வைரஸ் மற்றொரு அலையைத் தடுக்க அவசரமாக கொரோனா தடுப்பூசியின் 3 ஆவது டோஸ் வழங்கப்பட வேண்டும் என இலங்கை மருத்துவர் சங்கம் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.**

60 வயதுக்கும் மேற்பட்டவர்கள் மற்றும் 60 வயதுக்குக் குறைந்த நோயெதிர்ப்பு சக்தி குறைபாடு உடையவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அமெரிக்கா - ஜேர்மனி கூட்டுத் தயாரிப்பான பைசர் 3 ஆவது டோஸ் விரைவில் வழங்கப்படவேண்டும் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்தில், இலங்கை மருத்துவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்ற முதியவர்களில் 7 வீதம் பேர் கோவிட்டுக்கு எதிராக போதுமான அளவிலான நோய் எதிர்ப்பு சக்தியை கொண்டிருக்கவில்லை என்பது நிறுவப்பட்டுள்ளது.

அத்துடன், ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராசெனேகாவின் இந்தியத் தயாரிப்பான கோவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை சுகாதார துறைசார்ந்தோர் பெற்றுக்கொண்டு 6 மாதங்கள் ஆகின்றன. எனவே அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் தொடங்கும். இதனால் அவர்கள் கோவிட் தொற்றுக்கு ஆளாகும் அபாயம் அதிகம்.

இந்நிலையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நிலையில் உள்ள 60 வயதுக்குட்பட்ட நோயாளிகள் மற்றும் அனைத்து சுகாதாரத் துறையினருக்கும் தாமதமின்றி பைசர்-பயோஎன்ரெக் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் அல்லது பூஸ்டர் வழங்கப்படவேண்டும்.

எதிர்காலத்தில் மற்றொரு தொற்று அலையைத் தடுப்பதற்கான முன்னுரிமை நடவடிக்கைகளில் ஒன்றாக இது கருதப்படவேண்டும் எனவும் இலங்கை மருத்துவர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பாடசாலைகள் மீண்டும் திறப்பது, நடமாட்டக் கட்டுப்பாடுகளை நீக்குவது போன்ற காரணிகளால் தங்கள் பேரக் குழந்தைகள் ஊடாக முதியவர்கள் கோவிட் தொற்றால் பாதிக்கப்படுவதற்கான அபாயம் கணிசமாக அதிகரிக்கும். மற்ற வயதினரை விட முதியவர்கள் கோவிட் தொற்றால் கடும் பாதிப்புக்களை எதிர்கொள்வதுடன், மரணிக்கும் சந்தர்ப்பங்களும் அதிகம் எனவும் இலங்கை மருத்துவர் சங்கம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது அமுலில் உள்ள சுகாதார வழிகாட்டல்கள் மிகவும் தளர்வானவை. கோவிட் மற்றொரு எழுச்சியைத் தடுக்க கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படவேண்டும்.

நாட்டில் அமுலில் உள்ள சுகாதார வழிகாட்டுதல்கள் பொதுமக்களால் பரவலாக மீறப்படுகின்றன. பலர் முகக் கவசங்களை அணிவதைத் தவிர்க்கின்றனர். மேலும் கடைகள், சந்தைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் இறுதிச் சடங்குகள் போன்ற பொது இடங்களில் சமூக இடைவெளி பேணப்படுவதில்லை.

இந்நிலையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட சுகாதார விதிமுறைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ளவேண்டும் என அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் எனவும் இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், திருமண நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், இறுதிச் சடங்குகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் உள்ளரங்குகளில் இடம்பெறும் களியாட்ட நிகழ்வுகளுக்கான கட்டுப்பாடுகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மற்றொரு கோவிட் அலையைத் தடுக்க தொற்று நோயை முன்கூட்டியே கண்டறியும் நடைமுறை அவசியம். இதனை உறுதி செய்யும் வகையில் கோவிட் கண்காணிப்பு கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியம்.

கோவிட் தொற்று பரிசோதனைகளை அதிகரிக்குமாறும் அனைத்து வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளிலும் சுவாச தொற்று நோய் கண்காணிப்பு நடைமுறைகளை வலுப்படுத்துமாறும் சுகாதார அமைச்சை வலியுறுத்துவதாக இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக இலங்கை மருத்துவர் சங்கம் அனுப்பியுள்ளது. (அ)

## பணமோசடி செய்த பொலிஸ் அதிகாரி கைதாகினார்

கொழும்பு, ஒக். 29

பணமோசடி செய்த குற்றச்சாட்டில் வந்துரம்ப பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

10 இலட்சம் ரூபா பண மோசடி செய்தார் என கிடைத்த முறைப்பாடுக்கமைய, அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு புதிய நடைமுறை

கொழும்பு, ஒக். 29

வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வரும் பயணிகளுக்கான நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு திரும்பும் இலங்கையர்கள் கோவிட் தொற்றுக்குள்ளாகியிருந்தால் அவர்கள் வீடுகளில் இருந்து தனிமைப்பட அனுமதிக்க சுகாதார அமைச்சு தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

புதிய சுகாதார வழிக்காட்டலின் கீழ் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கோவிட் தொற்றாதவர்கள் மாத்திரம் வீடுகளில் தனிமைப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது கோவிட் தொற்றியிருந்தாலும் வீடுகளுக்கு சென்று தங்களை தனிமைப்படுத்திக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சிமெந்து தட்டுப்பாடு 2 மாதங்கள் நீடிக்கும்

## விலையும் மீண்டும் அதிகரிப்பு?

கொழும்பு, ஒக். 29

சந்தையில் சீமெந்து தட்டுப்பாடு மேலும் இரண்டு மாதங்களுக்கு காணப்படும் என சிமெந்து இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் சிமெந்து விலையை அதிகரிக்க எதிர்ப்பார்ப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்தும் கருந்து தெரிவித்த அவர்கள்,

இரண்டு நாள்களில் இதனை நிறுத்த முடியாது. எப்படியும் 2 மாதங்களாவது செல்லும். சிமெந்து தட்டுப்பாட்டுக்கு காரணம் டொலர் பிரச்னையாகும். இதனால் சிறு விலை அதிகரிப்பு ஏற்படக்கூடும்.

சமீபத்தில் சிமெந்து மூடை ஒன்றின் விலை 93 ரூபாவால் அதிகரிக்கப்பட்ட நிலையில் தற்போது ஒரு மூடை சிமெந்து 1,098 ரூபாவுக்கு சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது.

எவ்வாறாயினும், உரிய வகையில் சிமெந்து கிடைப்பதில்லை எனவும், அவ்வாறு கிடைக்கும் சிமெந்து பல்வேறு விலைகளின் கீழ் கிடைப்பதாகவும் விற்பனையாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஒரு தடவைக்கு 100 சிமெந்து மூடைகள் தான் கிடைக்கின்றன. 10 நிமிடங்களில் அவை முடிந்து விடுகின்றன.

இதன் காரணமாக கட்டுமான தொழிலில் ஈடுபட்டுள்ள தரப்பினர், சிமெந்து கல், பூந்தொட்டி மற்றும் பூங்கா அலங்காரப் பொருள்கள் உற்பத்தியாளர்கள் வருமான வழித்தடங்கள் தடைப்பட்டுள்ளதால் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் -என்று கூறினர். இந்நிலையில், சிமெந்து இறக்குமதியாளர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச் சர் லசந்த அழகியவன்னவை சந் தித்து கலந்துரையாடி இருந்த னர்.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர்,

எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் சந்தைக்கு சீமெந்தை பெற்றுக் கொடுக்க இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளனர்"-என்றார். (அ)

# இராஜதந்திர நெறிமுறைகளை மீறி செயல்படுகிறது கோட்டாபய அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 29

"தற்போதைய அரசு இராஜதந்திர நெறிமுறைகளையும்மீறி செயற்படுகின்றது." -என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல கூறியவை வருமாறு:

வழமையாக வெளிநாட்டுத் தூதுவர்களை, அமைச்சர்கள் தமது அமைச்சுக்கு அழைத்தே பேச்சு நடத்துவார்கள். விளக்கம் கோருவார்கள். இதுவே இராஜதந்திர நடைமுறை. ஆனால் இந்த அரசின் அமைச்சர்களும், அதிகாரிகளும் தூதுவர்களை நாடி, தூதரகங்களுக்கே சென்று சந்திப் புகளை நடத்துகின்றனர். இது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயலாகும்.

சீன நிறுவனத்திடமிருந்து உரம் வாங்கிய விவகாரம் இராஜதந்திர நடவடிக்கை அல்ல. நிலைமை இவ்வாறிருக்கையில், இதனை இராஜதந்திர பிரச்னையாக காண்பிப்பதற்கு அரசு முற்படுகின்றது-என்றார்.



அதேவேளை, சீனா என்பது எமக்கு மிக முக்கிய நாடு. தடுப்பூசி உட்பட பல வழிகளிலும் உதவிகளை செய்துள்ளது. உரத்தை மட்டும் அடிப்படையாக வைத்து உறவை கணிக்க முடியாது. தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டது. மாறாக தூதுவர் எமக்கு அழைப்பு விடுக்கவில்லை என்று இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (அ)

# எந்த தேர்தலையும் எதிர்கொள்ள தயார்!

## அரசிடம் கோருகிறது சிறிலங்கா சுதந்திர கட்சி அறிவிப்பு



கொழும்பு, ஒக். 29

**எதிர்காலத்தில் நடைபெறவுள்ள எந்தத் தேர்தலையும் எதிர்கொள்வதற்குத் தயாராகவுள்ளதாக சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போது மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் தேர்தல் தொகுதிகள் ஊடாக போட்டியிடும் வேட்பாளர் தெரிவு இடம்பெறுகிறது.

நேர்முகத் தேர்வின் ஊடாக தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (அ)

# அன்று இந்தியா பருப்பு போட்டதுபோல் இன்று சீனா உரத்தை திணிக்க முயற்சி!

## சுதந்திரக் கட்சி கடும் சீற்றம்



கொழும்பு, ஒக். 29

"அன்று இந்தியா பலவந்தமாக பருப்பு போட்டதுபோல இன்று பலவந்தமாக இலங்கையில் உரத்தை இறக்குவதற்கு சீனா முற்படுகின்றது. இந்த நடவடிக்கையை அனுமதிக்க முடியாது." - என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீன நிறுவனமொன்றிடமிருந்து நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சேதனப் பசளையை, தேசிய தாவரங்கள் தொற்று நீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையம் நிராகரித்துள்ளது. இவ்வாறு நிராகரிக்கப்பட்ட உரத்தை பலவந்தமாக நாட்டுக்குள் இறக்க முற்படுவது தவறு. அதேபோல மூன்றாம் தரப்பொன்றை நாடுவதும் தவறு.

நிராகரிக்கப்பட்டதை எவ்வாறு மீண்டும் நாட்டுக்கு கொண்டுவரமுடியும். சீனாவுக்கோ அல்லது பிற நாடுகளுக்கோ அவ்வாறு செய்ய முடியாது. இந்தியா அன்று பருப்பு போட்டதுபோலவே இன்று பலவந்தமாக உரத்தை இறக்குவதற்கு சீனா முற்படுகின்றது. இது இலங்கையின் இறையான்மையுடன் தொடர்பு பட்ட விடயமாகும்- என்றார். (அ)

# டிசெம்பரில் இலங்கைக்கு காத்திருக்கிறது ஆபத்து!

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 29

டிசெம்பர் மாதமளவில் நாட்டில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் உயர்வடையக்கூடும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்கும் வகையில் அமுலாகியிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றமை மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களை உரிய வகையில் மக்கள் கடைப்பிடிக்காமை ஆகியவையே இவ்வாறு கொரோனா நோயாளர்களின் அதிகரிப்புக்கு காரணமாக அமையுமெனவும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், பெரும்பாலானவர்கள் கொரோனா பரிசோதனைகளைச் செய்துகொள்வதை நிராகரித்துள்ளதாகவும், தடுப்பூசி செலுத்திக்கொள்ளாமல் இருப்பதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# ரயில் தண்டாவளத்தில் திருடப்பட்ட 112 ஆணிகள்

கொழும்பு, ஒக். 29

கரையோர ரயில் மார்க்கத்தின் கிங்தொட்ட பகுதியில் உள்ள ரயில் தண்டவாளத்திலிருந்து 112 ஆணிகள் அடையாளம் தெரியாத நபர்களினால் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு காலி மற்றும் ரத்கம பொலிஸாருக்கு ரயில் திணைக்களம் முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த இரண்டு தினங்களுக்குள் கிங்தொட்ட ரயில் நிலையம் முதல் பாலம் வரையில் 70 ஆணிகளும் பாலத்துக்கு அருகிலிருந்து ரத்கம நோக்கிய பகுதியில் 42 ஆணிகளும் அகற்றப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# இரண்டு நாள்கள் நாடு இருளில்!

கொழும்பு, ஒக். 29

நாடளாவிய ரீதியில் 48 மணித்தியால மின் துண்டிப்பை முன்னெடுக்க, இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க ஒன்றியம் தயாராகுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கெரவலப்பிட்டி யுகதனவி இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதியை அமெரிக்காவுக்கு வழங்கும் உடன்படிக்கையை மீளப்பெறுமாறு தெரிவித்து பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த போராட்டத்தில் இணைவதாக 11 கட்சிகளின் தலைவர்கள் வாக்குறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் சிறந்த விஞ்ஞானிகளின் பட்டியலில் 24 இலங்கையர்கள்!

கொழும்பு, ஒக். 29

உலகின் முன்னணி பல்கலைக்கழகமொன்று உலகின் முக்கியமான ஆய்வுகளை மேற்கொள்ளும் விஞ்ஞானிகள் தொடர்பில் விடுத்த புதிய அறிக்கையொன்றில் இலங்கையை சேர்ந்த நிபுணர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

அமெரிக்காவின் ஸ்டென்போர்ட் பல்கலைக்கழகம் விடுத்த இந்த அறிக்கைக்கு அமைய, உலகின் முக்கியமான ஆய்வுகளை மேற்கொள்ளும் 2 வீத விஞ்ஞானிகளில் இலங்கையைச் சேர்ந்த 24 பேர் அடங்குகின்றனர்.

இவர்களில் ஜயவர்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் நீலிகா மாளவிகே, பேராசிரியர் மெத்திகா விதானகே, கலாநிதி அனுஷ்கா யூ, ராஜபக்ஷ ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். இதனைத் தவிர சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், யாழ்ப்பாணம், பேராதனை, கொழும்பு, களனி, வயம்ப பல்கலைக்கழகங்களின் விஞ்ஞானிகளின் பெயர்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ)

# உள்நாட்டு துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 29

வெலிகேபொல பொலிஸ் பிரிவின் யடிபஸ்கமுவ பிரதேசத்தில் கைத்துப்பாக்கி ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் 51 வயதுடைய வெலிகேபொல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

# கெற்பேலியில் குண்டு மீட்பு!



யாழ்ப்பாணம், ஒக். 29

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் நேற்று முன்தினம் மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அந்த மோட்டார் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

கெற்பேலி கடற்கரைப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட இந்த மோட்டார் குண்டு ஒன்றே இவ்வாறு கொடிகாமப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

# மைத்திரிபால, வீரவன்ஸ, கம்மன்பில மொட்டினால்தான் எம்.பியானார்கள்!

## பொதுஜன பெரமுன அதிரடி தாக்குதல்



கொழும்பு, ஒக். 29

"மொட்டு சின்னம் இல்லாதிருந்தால் மைத்திரிபால சிறிசேன, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உள்ளிட்டவர்களுக்கு பாராளுமன்றம் வந்திருக்கமுடியாது. எனவே, அரசிலிருந்து வெளியேறுவதாக இருந்தால் தாராளமாக வெளியேறிச்செல்லுங்கள்."

-இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மைத்திரிபால சிறிசேன, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உள்ளிட்டவர்களுக்கு தனித்து போட்டியிட்டு வெற்றிபெற முடியுமா? மொட்டு சின்னம் இல்லாவிட்டால் அவர்களால் வெற்றி பெற்றிருக்கமுடியாது. மொட்டு சின்னத்தால்தான் நானும் வெற்றி பெற்றேன். எனவே, கூட்டு பொறுப்பை அவர்கள் காக்க வேண்டும்.

உள்ளக பிரச்னைகள் தொடர்பில் அரசுக்குள் பேச்சு நடத்தி தீர்வைக் காண முற்பட்டிருக்கவேண்டும். அதனை விடுத்து வெளியில் விமர்சனங்களை முன்வைத்ததால்தான் பங்காளிக்கட்சி தலைவர்களுக்கு ஜனாதிபதி சந்திப்புக்கு நேரம் வழங்கவில்லை என நினைக்கின்றேன்.

அரசிலிருந்து வெளியேறுவதாக இருந்தால் அவர்கள் செல்லலாம். அரசுக்குள் இருப்பதாக இருந்தால் அரசால் எடுக்கப்படும் தீர்மானங்களை ஏற்கவேண்டும்-என்றார். (அ)

# அரசு விதிக்கும் வரியை குறைத்தால் அரிசியை இறக்குமதி செய்ய தயார்!

## உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 29

அரசாங்கம் அரிசிக்கு விதித்துள்ள 65 ரூபாய் வரியை 20 ரூபாயால் குறைத்தால் அரிசியை இறக்குமதி செய்யத் தயாராக இருப்பதாக அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரை சந்தையில் அரிசிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதுடன் ஒரு கிலோ கீரிச் சம்பா அரிசி 225 ரூபாயாக அதிகரித்துள்ளது.

மேற்குறிப்பிட்டதுபோன்று வரி குறைக்கப்படுமாக இருந்தால் தட்டுப்பாடின்றி இந்தியாவிலிருந்து கீரிச் சம்பா மற்றும் பொன்னி சம்பா ஆகிய அரிசி வகைகளை இறக்குமதி செய்து 130 ரூபாயிலிருந்து 135 ரூபாய் வரை விற்கமுடியுமென அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் மேலும் கூறினர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டு உரப் பிரச்னையினால் எதிர்வரும் டிசெம்பர் மாதத்திலிருந்து அரிசிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது.

நுகர்வோருக்கு தேவையான அளவு சந்தையில் அரிசியைக் கொள்வனவு செய்வதற்கு முடியாவிட்டால் அதற்கு தற்போதுள்ள அரசாங்கமே பொறுப்புக்கூறவேண்டும் என்றும்,

எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படவுள்ள அரிசி தட்டுப்பாட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டுமாயின் தற்போதிருந்தே அரிசி இறக்குமதி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டியது அவசியமெனவும் உணவுப்பொருள் இறக்குமதியாளர்களின் சங்கம் மேலும் அறிவித்துள்ளது. (அ)

# அரசை காக்கவே போராடுகின்றோம்

## பங்காளி கட்சிகள் அறிவிப்பு

**கொழும்பு, ஒக். 29 "ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அல்ல, அரசைப் பாதுகாக்கவே போராடுகின்றோம்." - என்று அறிவித்துள்ளனர் அரச பங்காளிக் கட்சித் தலைவர்கள்.**



சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசுக்குள் மோதல் ஏற்பட்டுள்ளதாகவும், பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் தனிவழி பயணத்துக்கு தயாராகி வருகின்றனர் எனவும் வெளியாகும் தகவல்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

"தேசிய வளங்களையும், நாட்டையும் பாதுகாக்கவே 69 லட்சம் பேர் எமது அணிக்கு வாக்களித்தனர். எனவே, மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும். அதற்காக நாம் அரசுக்குள் இருந்துகொண்டு போராடுவோம்.

ஆட்சிமாற்றமோ, ஆட்சி கவிழ்ப்போ எமது நோக்கம் அல்ல. இந்த அரசை முன்னோக்கி அழைத்துச்சென்று, நாட்டை பாதுகாக்க வேண்டும். பிரச்னைகள் உள்ளன. அவற்றை பேச்சு மூலம் தீர்க்கவே முற்படுகின்றோம்."- என்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் கவனவீர்ப்பு போராட்டம்



முல்லைத்தீவு, ஒக். 29

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர் .

கோவிட் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது .

கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் போராட்டம் நேற்று 1696 ஆவது நாளாக தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'எங்கே எங்கே உறவுகள் எங்கே', 'குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும்', 'நீதி வேண்டும்,சர்வதேசமே பதில் சொல்' என்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தங்கியவாறும் பங்கேற்றனர். (அ)

# சிம் அட்டை, புகையிலை பையுடன் விளக்கமறியல் கைதிகள் சிக்கினர்!

கொழும்பு, ஒக். 29

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் சிம் அட்டை மற்றும் புகையிலை அடங்கிய பொதியை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் இரு கைதிகளைப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே சிம் அட்டை மற்றும் புகையிலை என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹற்றன் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபரின் சட்டையின் இடது பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சிம் அட்டை கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு - 05 பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேகநபரின் ஆசன வாயிலில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 6 புகையிலைத் துண்டுகள் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (அ)

# உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்ப ஆலோசனை குழு உறுப்பினராக நீலிகா!

கொழும்பு, ஒக். 29

கொரோனா தொடர்பான உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறையின் தலைவர் பேராசிரியர் நீலிகா மாளவிகே நியமிக்கப்பட்டுள்ளார்.

கொரோனா தொழில்நுட்ப அணுகல் தொடர்பான அறிவியல், தொழில்நுட்ப மற்றும் மூலோபாய விடயங்களில் ஆலோசனை வழங்குவதற்காக உலக சுகாதார அமைப்பு ஒரு தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவை நிறுவியது.

கொரோனா சுகாதார தயாரிப்புகளில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் என பலதரப்பட்ட அறிவு மற்றும் நிபுணத்துவம் கொண்ட 10 புகழ்பெற்ற நிபுணர்களை இந்தக் குழு கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்கான உதவி தொடரும்!

## பிரதமரிடம் சீனத் தூதுவர் உறுதி



கொழும்பு, ஒக். 29

இந்நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு சீனாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ.ஷென்ஹொன் முன்னிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பாராட்டைத் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சீனத் தூதுவர் சீ.ஷென்ஹொன், நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கோவிட் தொற்று நிலைமையை கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பில் சீன அரசாங்கத்துக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கையின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு வாழ்த்து தெரிவித்த சீனத் தூதுவர் சீ.ஷென்ஹொன் , அதற்கு சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

சீன மக்கள் வங்கி (PBOC) மற்றும் இலங்கை மத்திய வங்கி (CBSL) இடையிலான 10 பில்லியன் சீன யுவான் மதிப்பிலான இருதரப்பு நிதி பரிமாற்ற ஒப்பந்தமானது, உலகளாவிய முதலீட்டாளர்களின் உணர்வை வலுப்படுத்தவும், இலங்கையின் பொருளாதாரம் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் உதவும் என சீனத் தூதுவர் இதன்போது வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 65 ஆண்டு நிறைவு மற்றும் இறப்பர் - அரிசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 70 ஆண்டுகள் பூர்த்தியாகின்றமை ஆகியவற்றை குறிக்கும் 2022ஆம் ஆண்டானது, இலங்கை - சீன இருதரப்பு உறவின் மிக முக்கியமான ஆண்டாக விளங்கும் என சீனத் தூதுவர் சீ.ஷென்ஹொன் நம்பிக்கை தெரிவித்தார்.

# டிப்பர்-பட்டா மோதியதில் விபத்து; தனங்களப்பில் 6 பேர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஒக். 29


சாவகச்சேரி-தனங்கிளப்பு பகுதியில் டிப்பர் வாகனமும் பட்டா ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பட்டா ரக வாகனமும், யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

சம்பவத்தில் 6 பேர் காயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)




# இரசாயன உர இறக்குமதி தடையும் விவசாயிகளின் போராட்டங்களும்!

**பார்த்தீபன்**

இரசாயன பசளை இறக்குமதியைத் தடை செய்வதென்ற தனது முடிவு இந்தளவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ எதிர்பார்த்திருக்கமாட்டார். வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் விவசாயிகள் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் போராட்டங்கள் அரசாங்கத்துக்கு பெரும் சங்கடமான நிலையைக் கொடுத்திருக்கின்றது. அடிமட்ட மக்கள் மத்தியில் அரசின் மீதான ஆதரவு பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

அரசாங்கத் தரப்பினரே இதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். தற்போதைய நிலையில் தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கத்தினால், அரசாங்கம் தோல்வியடையும் என இராஜாங்க அமைச்சர் ஒருரே சொல்லியிருக்கின்றார். ஆனால், இதனைத் தெரிந்துகொண்டுதான் அரசாங்கம், நாட்டின் எதிர்கால நலன்கருதி செய்திருக்கின்றது என்பது அவரது கருத்து. அதாவது, இது ஒரு கசப்பான மருந்து என்பதுதான் அவரது கருத்து.

இராஜாங்க அமைச்சர் கூறியிருப்பது போல, இரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பாவனையைத் தடை செய்வதும், இயற்கை விவசாயத்துக்குச் செல்வதும் வரவேற்கத்தக்க முடிவுதான். அது அவசியமானதும் கூட. விவசாய நிலத்தில் இரசாயன உரத்தை பயன்படுத்துவதை தெற்காசிய நாடான பூட்டான் ஏற்கனவே தடைசெய்துள்ளது. அவுஸ்திரேலியா மற்றும் சீனாவும் சேதன (இயற்கை) விவசாயத்தில் பெருமளவில் ஈடுபடுகின்றன.

இலங்கையில் நெல் மற்றும் காய்கறி பயிர்ச்செய்கைக்கு விவசாயிகள் இரசாயனங்களை அதிகளவில் நம்பியிருப்பதால், இவ்வாறான நடவடிக்கை எடுத்திருப்பது அவர்களை உடனடியாகப் பாதித்திருக்கிறது. அவர்கள் பூச்சிக்கொல்லிகள், களைநாசினிகள் மற்றும் இரசாயன உரங்களைப் பரவலாகப் பயன்படுத்துகின்றனர். இது நச்சு சுழற்சியாக மாறி, குறிப்பிட்ட காலத்திற்குள் மண்ணுக்குள் உள்ள ஊட்டச்சத்துக்களை அழிக்கும் என்பதும் உண்மை.

தேயிலைத் தோட்டங்களுக்கு பயன்படுத்துவதற்காக இரசாயன உரம் முதன் முதலாக 1950 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1962ஆம் ஆண்டின் பின்னர், நெல் மற்றும் காய்கறி பயிர்ச்செய்கையாளர்களும் செயற்கை உரத்தை பயன்படுத்த ஆரம்பித்தனர். பயிர்செய்கையில் இது இரு மடங்கு அறுவடையை பெற்றுக்கொடுத்தது. அப்போதிலிருந்து, இறக்குமதி செய்யப்படும் இரசாயன உரத்தை விவசாயிகள் நம்பியுள்ளனர். அவ்வப்போது ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள், மக்கள் தொகை அதிகரிப்பிற்கேற்ப உணவுத் தேவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் மேலும் மேலும் மானிய உரங்களை வழங்கியுள்ளது.

இலங்கையில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலத்தின் பரப்பளவு சுமார் 708 ஹெக்ரேயர்கள் ஆகும். நெற்பயிர்ச்செய்கையின்போது இரசாயன உரத்தின் விளைவாக வளரும் நெல்லின் அளவு 66.8 வீதமாகும். 32.9 வீதமானோர் இரசாயன மற்றும் சேதன உரத்தை பயன்படுத்துகின்றனர். 0.02 வீதமானோர் மட்டுமே சேதன பசளையை பயன்படுத்துகின்றனர். நெற்பயிர்ச்செய்கையின்போது 74 சதவீதம் பூச்சிகொல்லிகளும் 84 வீதமான களைநாசினிகளும் பயன்படுத்தப்படுகின்றன. கைகளால் களைகளை அகற்றுவதற்கான பாரம்பரிய முறைகளை 12 வீதமானோர் மட்டுமே பின்பற்றுகின்றனர்.

இந்த இரசாயன பயன்பாட்டால் எமது உணவு விநியோகத்தில் ஏற்படும் தீங்கின் அளவை கணிக்க முடியும். எனினும், இரசாயன உர தடை காரணமாக, உடனடியாக தீர்வுகாண முடியாத பல பிரச்னைகள் எழுந்துள்ளன. இரசாயன உரத்தின் பயன்பாடின்றி வளரும் பழங்களும் காய்கறிகளும் போதிய வேகத்துடன் வளராமல் இருக்கலாம். ஆகையால், விநியோக நடவடிக்கை 50 வீதத்தால் குறையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு சென்றால் எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு இறக்குமதி செய்யும் நிலை ஏற்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இருந்தபோதிலும், மண்ணைப் பாதுகாப்பதற்கும், உணவுப் பொருட்களின் தரத்தைப் பேணுவதற்கும், அவற்றில் நச்சுத் தன்மையுள்ள இரசாயனங்கள் கலப்பதைத் தவிர்ப்பதற்கும் இவ்வாறான நடவடிக்கை அவசியமானதுதான்.

அதேவேளையில், இலங்கை இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தினால், சுமார் 221 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சேமிக்கப்படுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் கூறியிருந்தார். ஆக, பெருமளவுக்கு அந்நியச் செலாவணியை மீதப்படுத்தவும், நாட்டின் பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வைக்கொண்டுவருவதற்கும் உதவக்கூடிய ஒரு திட்டம்தான் இந்த இரசாயண உரங்களின் இறக்குமதிக்கான தடை. இதனால் மூலமாக நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நிதிப் பிரச்னையையும் தீர்க்க முடியும் என்பதையும் அரசாங்கம் கணக்குப் பார்த்திருக்கும்.

ஆனால், மாற்று ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல், அதனை அரசாங்கம் சடுதியாக நடைமுறைப்படுத்தியமைதான் இலங்கையில் தற்போது காணப்படும் நெருக்கடிகளுக்கு காரணம். அடுத்த போகத்துக்குத் தயாரான விவசாயிகளை இது அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இரசாயண உரமும் இல்லாமல், இயற்கை உரமும் இல்லாமல் அவர்கள் தலையில் கைகளை வைத்துக்கொண்டுள்ளார்கள்.

வறட்சி, வெள்ளம், பயிர் தொற்று நோய்கள் மற்றும் காட்டு யானை பிரச்னை என இலங்கையில் விவசாயிகள் மதிப்பிட முடியாத அளவிற்கு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். வாழ்நாள் முழுவதும் விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கான காப்பீடு, இழப்பீடு அல்லது ஓய்வூதிய திட்டத்தை வழங்கும் சரியான பொறிமுறை அரசாங்கத்திடம் இல்லை. இவ்வாறான நிலையில் இந்தத் திடீர்ப்பிரச்னை அவர்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதாகக்கூறி இயற்கை உரத்தை இறக்குமதி செய்கின்றோம் என்ற பெயரில் சீனாவிலிருந்து கழிவுகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முற்பட்டமையும் புதிய பிரச்சினை ஒன்றை உருவாக்கியிருக்கின்றது. சீனாவிலிருந்து இவ்வாறு இயற்கை உரத்துடன் வந்த கப்பல் துறைமுகத்துக்குள் பிரவேசிப்பது தடை செய்யப்பட்டது. குறிப்பிட்ட “இயற்கை” உரத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பக்றீரியாக்கள் காணப்பட்டதாக முதற்கட்ட பரிசோதனை உறுதி செய்தது. இதனையடுத்தே இந்தக் கப்பலை தடை செய்யும் முடிவு எடுக்கப்பட்டது.

20,000 மெற்றிக் தொன் சேதன பசளையுடன் குறித்த கப்பல் கடந்த 22 ஆம் திகதி கொழும்பு கடல் பகுதியை வந்தடைந்தது. கப்பலில் காணப்படும் பசளையில் தீங்கு விளைவிக்கும் பக்றீரியாக்கள் காணப்படுவதாக தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையம் தெரிவித்திருந்தது. சீன நிறுவனத்திடம் பெற்றுக்கொள்ளப்பட்ட பசளைகளின் மாதிரிகளில் பக்றீரியா காணப்படுகின்றமை இரண்டு சந்தர்ப்பங்களில் உறுதி செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்தே கப்பலை துறைமுகத்துக்குள் அனுமதிக்க வேண்டாம் என உத்தரவிடப்பட்டது.

இந்த முடிவு நிச்சயமாக ஒரு தரப்பினருக்கு அதிர்ச்சியளிப்பதாக இருந்திருக்கலாம். மற்றொரு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான அழுத்தம் இலங்கை அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டது. மறுபுறம் கப்பல் திரும்பிச்செல்லாமல் கொழும்பையடுத்துள்ள பகுதிகளிலேயே நடமாடுவதற்காக கப்பல் நிறுவனங்கள் சில தெரிவித்திருந்தன. இவ்விடயத்தை எதிரணியினரும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதால், நிதானமாகச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு உரத்தை ஏற்றி வந்த குறிப்பிட்ட சீன கப்பலான ‘Hippo Spirit’ இலங்கை கடலுக்குள் நுழைவதற்காக அதன் பெயரை Seiyo Explorer என மாற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, ஏவ்வாறானாலும் இலங்கைக்குள் நுளைந்துவிட வேண்டும் என்பதில் கப்பல் நிறுவனமும், பசளையை அனுப்பிவைத்தவர்களும் அக்கறையாக இருப்பதையே இது வெளிப்படுத்தியது.

இயற்றைப் பசளையை உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அது ஓரளவுக்காவது வெற்றியளித்துள்ளது என்பதை விவசாயத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் உறுதிப்படுத்திய பின்னர் இரசாயன உர இறக்குமதியைத் தடை செய்வது என்ற முடிவை அரசாங்கம் எடுத்திருக்க வேண்டும். அவ்வாறாயின் இது வெற்றிபெற்றிருக்கும். பெருமளவுக்கு விவசாயத்தை நம்பியுள்ள நாட்டில் இவ்வாறு இராணுவ பாணியில் எடுக்கப்படும் அதிரடியான முடிவுகள் எதிர்பாராத முடிவுகளையே கொண்டுவருவதாக இருக்கும்.

இயற்கை உரம் என்பது பெருமளவுக்கு மிருகங்களின் கழிவுகள், மற்றும் தாவரங்களின் கழிவுகளிலிருந்தே தயாரிக்கப்படுகின்றது. மிருகங்களின் கழிகளைப் பெற்றுக்கொள்ளும்போது, அவற்றில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பக்றீரியாக்கள் கலந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும். இந்திய அமைதிப்படை வடக்கு, கிழக்கில் இருந்த காலத்தில்தான் பயிர்ச்செய்கையைப் பெருமளவுக்குப் பாதிக்கும் பாத்தீனியம் பரவியது. இந்தியப் படையினர் தமது உணவுக்காகக் கொண்டுவந்திருந்த ஆடுகளின் கழிவுகள் (புளுக்கை) மூலமாகவே அது பரவியது. இயற்கைப் பசளையை இறக்குமதி செய்வதில் இருக்கக்கூடிய ஆபத்துக்கு இது ஒரு உதாரணம்.

இவை எதையும் அவசர அவசரமாக செய்ய முடியாது. அத்தோடு, ஒரு கட்டமைப்பையும் வாழ்க்கை முறையையும் மாற்றுவது கடினம் என்பதில் சந்தேகமில்லை. ஒரு வேலையை செய்து முடிப்பதை விட ஒரே இரவில் வர்த்தமானியை வெளியிடுவது இலகுவானது.

அரசாங்கம் துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளாமல் முக்கியமான முடிவுகளை எடுப்பதுதான் தற்போது உருவாகும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் காரணமாகவுள்ளது. இந்த அணுகுமுறையை அரசாங்கம் மாற்றிக்கொள்ளாத வரையில் இதுபோன்ற நெருக்கடிகள் தொடர்வதைத் தவிர்க்க முடியாது. ■

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

# ஆபத்தில் சென்னை

## காலநிலை மாற்றம் தமிழ்நாட்டில் ஏற்படுத்தவிருக்கும் தாக்கம் என்ன?

காலநிலை மாற்றத்தால் இந்தியா வில் அதிகம் பாதிக்கப்படும் பெருநகரங்களில் ஒன்றாக தொடர்ந்து பேரிடரைச் சந்திக்கும் நகரமாக சென்னை அடையாளம் காணப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் நிலை என்னவாகும்?



கடந்த 2019ஆம் ஆண்டில் ஏற்பட்ட தண்ணீர்த் தட்டுப்பாட்டை தமிழ்நாட்டில் யாரும் அவ்வளவு சீக்கிரம் மறந்திருக்க முடியாது. அந்த ஆண்டு, தமிழ்நாடு முழுவதுமே தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்தது என்றாலும் மாநிலத்தின் தலைநகரான சென்னை மிக மிக மோசமான தண்ணீர் நெருக்கடியை எதிர் கொண்டது.

சென்னைக்கு அருகில் உள்ள மாவட்டங்களில் இருந்து ரயில் மூலம் தண்ணீரைக் கொண்டு வந்து நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. கழிவு நீரைச் சுத்திகரித்துப் பயன்படுத்துதல், கடல்நீரைக் குடிநீராக்கிப் பயன்படுத்துதல் ஆகியவற்றையும் தாண்டி இந்த நிலைமை ஏற்பட்டது. இத்தனைக்கும் அதற்கு முந்தைய ஆண்டுகளில்தான் பெரும் வெள்ளத்தை எதிர்கொண்டிருந்தது சென்னை.

2010ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ்நாடோ, சென்னையோ இது போன்ற இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதென்பது ஒரு வழமையான நிகழ்வாகிவருகிறது. 2011ஆம் ஆண்டின் இறுதியில் தானே புயல், அதற்குப் பிறகு நிலம் புயல், 2015இல் சென்னைப் பெருவெள்ளம், 2016இல் வார்தா புயல், 2017இல் ஒக்கி, 2018இல் கஜா, 2019இல் சென்னையின் கடும் தண்ணீர் வறட்சி, 2020இல் நிவர் புயல் என தொடர்ச்சியாக இயற்கைப் பேரிடர்கள் தமிழ்நாட்டை உலுக்கிவருகின்றன.

தமிழ்நாட்டின் பருவ நிலை என்பது இந்தியாவின் பிற பகுதிகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. இந்தியாவின் பிற பகுதிகளில் ஜூன், ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்கள் மழைக்காலமாக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்கள் மழைக்காலமாக அமைந்திருக்கின்றன.

தமிழ்நாடு பெரும்பாலும் தனது தண்ணீர்த் தேவைக்கு இந்த பருவ மழைக் காலத்தையே நம்பியிருக்கிறது. பருவமழை பொய்த்துப் போகும் வருடங்களில் தண்ணீர் சார்ந்து மிகப் பெரிய சிக்கல்களை தமிழ்நாடு சந்திப்பது வழக்கம். அல்லது தீவிர புயல்கள் தமிழ்நாட்டில் கரையைக் கடக்கும்போது, அவை ஏற்படுத்தும் சேதம், மிகக் கணிசமானதாக இருந்து வருகிறது.

இந்தப் பின்னணியில் காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு அரசின் செயல்திட்டம் 2.0 ஒரு முக்கியமான விஷயத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அதாவது, கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாடு, பருவநிலை சார்ந்து அதீதமான நிகழ்வுகளைச் சந்திப்பது அதிகரித்திருக்கிறது என்பதுதான்.

தமிழ்நாட்டின் மழைப் பொழிவைப் பொறுத்தவரை, 1951 - 2013இற்கு இடைப்பட்ட காலத்தில் ஆண்டுக்கு சராசரியாக 987 மில்லி மீற்றர் மழை பதிவாகியிருக்கிறது. குறைந்த அளவாக 317.4 மில்லி மீற்றரும் அதிக அளவாக 1890.5 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளன. இதில் நீலகிரி மாவட்டம் அதிகபட்ச சராசரி மழைப் பொழிவையும் கரூர், தூத்துக்குடி மாவட்டங்கள் குறைந்தபட்ச மழைப் பொழிவையும் பெறுகின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் வடகிழக்கு மாவட்டங்களான கடலூர், சென்னை, காஞ்சிபுரம், திருவாரூர், நாகப்பட்டினம், மேற்கு மாவட்டமான நீலகிரி ஆகியவை அதிக மழையைப் பெறுகின்றன.

ஆனால், இவையெல்லாம் மாற ஆரம்பித்துவிட்டன. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளை தமிழ்நாடு ஏற்கனவே எதிர்கொள்ள ஆரம்பித்துவிட்டது என்கிறது தமிழ்நாடு அரசின் செயல்திட்ட அறிக்கை. வெள்ளம், இடியுடன் கூடிய திடீர் மழை, வெப்ப அலை, வறட்சி, மின்னல், காட்டுத் தீ ஆகியவை ஏற்கனவே மக்களைப் பாதிக்க ஆரம்பித்துவிட்டதாக இந்த அறிக்கை சொல்கிறது.

இந்தக் காலநிலை மாற்றத்தின் காரணமாக, தமிழ்நாட்டின் வெப்பநிலையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. 1951 - 2013 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்த வெப்பநிலையோடு ஒப்பிட்டால், இந்த நூற்றாண்டின் முடிவில் வெப்பநிலையானது 1.7 டிகிரி சென்டிகிரேட் முதல் 3.4 டிகிரி சென்டிகிரேட்வரை அதிகரிக்கக்கூடும் என கணிக்கப்பட்டிருக்கறது. இந்த நூற்றாண்டின் மத்தியில், அதாவது 2025 வாக்கில் வெப்பநிலையானது 1.0 டிகிரி முதல் 1.2 டிகிரிவரை அதிகரிக்கக்கூடும்.

இந்தக் காலநிலை மாற்றத்தால் ஒட்டுமொத்த மழையளவானது இந்த நூற்றாண்டின் மத்தியில் 4.4 சதவீதம் அளவுக்கு அதிகரிக்கும் என்றும் நூற்றாண்டின் இறுதியில் 20.5 சதவீதம் அளவுக்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், மழையின் அளவு அதிகரிப்பதற்காக தமிழ்நாடு சந்தோஷப்பட முடியாது.

“ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது மழை அளவு அதிகரிக்கும் என்பது உண்மைதான். ஆனால், மழை பெய்யும் நாட்கள் மிகவும் குறையும். உதாரணமாக தற்போது 60 நாட்களில் பெய்யும் மழை வெறும் இருபது நாட்களில் பெய்யும். அப்படியானால், ஒவ்வொரு மழையிலும் வெள்ளம் ஏற்படும். வெள்ளம் வடிந்ததும் நாட்கள் வெப்பமானதாக இருக்கும். ஒரே நேரத்தில் மழை பெய்வதால், அதனை சேமித்து வைப்பது இயலாத காரியமாக இருக்கும். இதனால் வறட்சி ஏற்படும்” என்கிறார் சென்னை வளர்ச்சி ஆய்வு நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியரான எஸ்.ஜனகராஜன்.

> “
> தமிழ்நாட்டின் பருவ நிலை என்பது இந்தியாவின் பிற பகுதிகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. இந்தியாவின் பிற பகுதிகளில் ஜூன், ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்கள் மழை காலமாக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்கள் மழை காலமாக அமைந்திருக்கின்றன.

இதுதவிர, காலநிலை மாற்றம் தமிழ்நாட்டில் வேறுவிதமான தாக்கங்களையும் ஏற்படுத்தும் என்கிறார் அவர். இந்தியாவில் மிக நீளமான கடற்கரையைக் கொண்டிருக்கும் இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு. கிட்டத்தட்ட 1070 கி.மீ. நீள கடற்கரை தமிழ்நாட்டில் இருக்கிறது. காலநிலை மாற்றத்தால் துருவப் பிரதேசங்களில் பனி உருகி கடல் மட்டம் அதிகரிக்கும்போது, அதிகம் பாதிக்கப்படும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருக்கும் என்கிறார் ஜனகராஜன்.

”தமிழ்நாடு மட்டுமல்ல, குஜராத், கொல்கத்தா, வங்கதேசம் போன்ற கடலோரப் பகுதிகளும் மூழ்க ஆரம்பிக்கும். இப்போதே தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஓதம் அதிக முள்ள நாட்களில் கடல் நீர் பல மீட்டர் தூரத்திற்கு உள்ளே வருகி றது. இந்த தூரம் போகப் போக அதிகரிக்கும். வடசென்னையில் இப்போத பல இடங்களில் கடலரிப்பைப் பார்க்கிறோம். புவியின் மேல் மட்டத்தில் மட்டுமல்லாமல், நிலத்தடிக்குக் கீழேயும் கடல்நீர் உட்புகும்” என்கிறார் ஜனகராஜன்.

சில நாட்களுக்கு முன்பாக Council for Energy, Environment and Water என்ற அமைப்பு “Mapping India's Climate Vulnerability” எனும் தலைப்பில் முதல் முறையாக மாவட்ட அளவிலான கால நிலை பாதிப்பு குறித்த மதிப்பீட் டாய்வை மேற்கொண்டு, முடிவுகளை வெளியிட்டுள்ளது.

அந்தப் பட்டியலின்படி இந்தியாவில் காலநிலை மாற்றத்தால் மிக மோசமாக பாதிக்கப்படும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு 12ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. அசாம், ஆந்திரா, மகாராஷ்டிரா ஆகியவை முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.

இந்தியாவில் உள்ள 35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 27 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்கலும் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பேரிடரை எதிர்கொள்ள வேண்டியிருக் கும். இந்தக் காலநிலை மாற்றத்தால் மேற்கு மற்றும் மத்திய மாநிலங்கள் வறட்சியை எதிர்கொள்ளும். வடக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் அதீத மான வெள்ளத்தை எதிர்கொள்ளும். கிழக்கு மற்றும் தென் மாநிலங்களைப் பொறுத்தவரை அதீதமான புயல்கள், தீவிர வெள்ளம், வறட்சி ஆகிய மூன்றையுமே எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்தியாவின் அதிக வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ளும் நகரங்களில் சென்னை ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளது. புயலின் பாதிப்பை அதிகம் எதிர்கொள்ளும் நகரங்களில் நான்காவது இடத்தைப் பிடித்திருக்கிறது. இந்தியாவில் வெள்ளம், பஞ்சம், புயல் ஆகிய தண்ணீரால் ஏற்படக்கூடிய பேரிடர்களை அதிகம் எதிர்கொள்ளக்கூடிய நகரங்களின் பட்டியலில் ஏழாவது இடத்தைப் பிடித்திருக்கிறது.

வெள்ளம், வறட்சி, புயல் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளை எந்த நகரம் அதிகம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது குறித்து ஒரு பட்டியல் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டியலில் சென்னை 2ஆவது இடத்தில் இருக்கிறது. தஞ்சாவூர் 83ஆவது இடத்திலும் நாகபட்டினம் 91ஆவது இடத்திலும் தூத்துக்குடி 97ஆவது இடத்திலும் கடலூர் 101வது இடத்திலும் விருதுநகர் 134ஆவது இடத்திலும் விழுப்புரம், நாமக்கல், கரூர் ஆகிய மாவட்டங்கள் முறையே 153, 154, 156 ஆகிய இடங்களிலும் உள்ளன.

இந்த நிலையில், இம்மாதிரியான பேரிடர்களை எதிர்கொள்வது, பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கான ஏற்பாடுகளைத் திட்டமிடுவது போன்றவற்றை அரசுகள், திட்டமிட்டதைவிட முன்கூட்டியே செய்ய வேண்டிய நெருங்கிக் கொண்டிருக்கிறது. காலநிலை மாற்றம் தாக்கும்போது, எந்தத் தனிநபரும் பாதுகாப்பாக இருக்க முடியாது என்பதை மனதில் கொண்டு இந்தப் பிரச்னையை அணுகவேண்டும்.


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I,II நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

- 38ஆம் 39ஆம் வினாக்களுக்கு பின்வரும் உருவை அவதானித்து விடை தருக.



38. மேலே உள்ள இப்பெரிய கனக்குற்றியானது சமமான சிறிய கனக்குற்றிகளால் அடுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவில் உள்ள சிறிய கனக்குற்றிகள் எத்தனை?
    1) 12 2) 14 3) 9

39. இப் பெரிய கனக்குற்றியில் சுற்றிவர வர்ணம் பூசப்பட்டிருப்பின் இரண்டு பக்கங்கள் மாத்திரம் நிறம் பூசப்பட்ட கனக்குற்றிகள் எத்தனை?
    1) 3 2) 2 3) 4

40. சிற்றுண்டிச் சாலை ஒன்றிற்கு சில நண்பர்கள் உணவு உண்பதற்காகச் செல்கின்றனர் , அவர்கள் உண்ட உணவிற்கான செலவு ரூபா 2400 ஆகும். செலவை எல்லா நண்பர்களும் சமமாகப் பங்கிட விரும்பினர். இவர்களில் இரண்டு நண்பர்களிடம் பணம் இல்லாததினால் ஏனைய நண்பர்கள் ஒவ்வொருவரும் ரூபா 100.00 ஐ மேலதிகமாகச் செலுத்தினர். எனின், சிற்றுண்டிச்சாலைக்குச் சென்ற நண்பர்கள் எத்தனை பேர் ?
    1) 6 பேர் 2) 8 பேர் 3) 7 பேர்

***

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

நாங்கள் பூக்களில் உள்ள தேனைக் குடிப்பவர்கள். எங்கள் குடும்பம் மிகவும் பெரியது. அழகிய நந்தவனமே எங்கள் இருப்பிடம். நீண்ட நாட்களாக நாங்கள் ஒற்றுமையாக அந்த நந்தவனத்தில் வசித்து வந்தோம். வண்ண வண்ணப் பூக்களின் மணமும் எமது அழகும் காண்போரைப் பரவசப்படுத்தும். அண்மையில் நாங்கள் குடியிருந்த நந்தவனம் சில மனிதர்களால் அழிக்கப்பட்டது. இதனால் எமது உறவினர்கள் வெவ்வேறு திசைகளை நோக்கிப் பிரிந்து சென்றுவிட்டனர்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) இப்பந்தியில் கூறப்பட்ட பிராணியின் பெயரின் கீழ்க் கோடிடுக.
   1) கிளி 2) வண்ணத்துப்பூச்சி 3) குருவி

ii) காண்போரைப் பரவசப்படுத்துபவற்றில் ஒன்றினை எழுதுக.
   ......................................................................................................

iii) பெயரடைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.
   ......................................................................................................

iv) சேய்மையில் என்பதன் எதிர்க் கருத்தினை எழுதுக.
   ......................................................................................................

v) அடுக்குத் தொடரினை எழுதுக.
   ......................................................................................................

vi) தன்மைப் பன்மை இறந்த கால வினைச் சொல்லினை எழுதுக.
   ......................................................................................................

2. **சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ்க் கீறிடுக.**

அ) 1) சக்கரவத்தி 2) சர்க்கரவத்தி 3) சக்கரவர்த்தி
ஆ) 1) பொறுப்பாளி 2) பொறுப்பாலி 3) பொருட்பாளி

3. **கீழே தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்குக.**

பொருள் / உண்டு / தமிழில் / ஒரு / தருவதும் / சொல்லாகிப் / எழுத்து / ஓர்
......................................................................................................

4. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

i) நாம் இயற்கையை இரசித்தபடி கொழும்பு நகரை வந்தடைந்தேன். ( )
ii) ஆண்டுகள் பல வேகமாகக் கடந்தோடியது. ( )
iii) பசிய இலைகளை நான் உணவாக உண்டேன். ( )
iv) ஒவ்வொரு கதிரும் முற்றி விளைந்திருந்தது. ( )

5. **பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

அன்வர் பெருநாள் தினம் என்ன செய்வீர்கள்

6. i) **பின்வரும் விடுகதைக்கான விடையினை எழுதுக.**

நீட்டிக்கொண்டு நீளமாகவும் படுப்பேன்.
சுருட்டிக் கொண்டு மூலையிலும் நிற்பேன். நான் யார்?
......................................................................................................

www.lkedu.lk

# தமிழ் மக்களின் கடும் வெறுப்பை வெகுவிரைவில் சம்பாதிப்பீர்கள்!

## ஜனாதிபதிக்கு சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.29

**“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ்பேசும் மக்களின் மனதைச் சீண்டிக் கருமங்களை நிறைவேற்ற விரும்புவதன் ஊடாக நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது. இங்கு புரிந்துணர்வு ஏற்படாது. சமாதானம் ஏற்படாது. ஒட்டுமொத்த தமிழ்பேசும் மக்களின் வெறுப்பின் வெளிப்பாட்டைத்தான் காலப்போக்கில் ஜனாதிபதி சந்திப்பார்.”**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் “ஒரே நாடு - ஒரே சட்டம்“ என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13 உறுப்பினர்களைக் கொண்ட செயலணியை நியமித்துள்ளார்.



இலங்கை அரசமைப்பின் 33 ஆம் உறுப்புரையில், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்தச் செயலணியின் தலைவராக நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்ற - பின்னர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறைத்தண்டனை அனுபவித்த - தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வரும் ஒருவரை ஜனாதிபதி செயலணியின் தலைவராக எந்தவகையில் ஏற்றுக்கொள்ள முடியும்?

13 உறுப்பினர்களைக் கொண்ட இந்த விசேட ஜனாதிபதி செயலணியில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரேனும் நியமிக்கப்படவில்லை. இது ஜனாதிபதியின் திட்டமிட்ட செயலா?

ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரம் தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி குழுக்களை - செயலணிகளை நியமிக்கலாம். ஆனால், இவ்விதமான தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் நாட்டினுடைய ஒற்றுமை, சமத்துவம், நீதி, கௌரவம் போன்ற கருமங்களில் மிகவும் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும்.

ஜனாதிபதி இவ்விதமான கருமங்களை நிறைவேற்ற விரும்புவதன் ஊடாக நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது. இங்கு புரிந்துணர்வு ஏற்படாது. சமாதானம் ஏற்படுவது மிகவும் கஷ்டம் அது ஏற்படாது.

ஆனபடியால் ஜனாதிபதி இவ்விதமான கருமங்களைச் செய்கின்றபோது அவற்றை நாட்டு மக்கள் - விசேடமாக தமிழ்பேசும் மக்கள் - தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கக்கூடாது. அதை அவர்கள் வெறுப்பார்கள். அந்த வெறுப்பின் வெளிப்பாட்டைக் காலப்போக்கில் அவர்கள் வெளிக்கொணர்வார்கள். அதுதான் நிலைமை” - என்றார். (இ)

# அரியணை ஏற்றிய எங்களை மறவாதீர்

## ஜனாதிபதியிடம் விமல் இடித்துரைப்பு



கொழும்பு, ஒக். 29

“கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதிக் கதிரையில் அமர வைத்ததில் சிறிலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் பங்காளிக் கட்சிகளுக்குப் பெரும் பங்கு உண்டு. ஆனால், அதை மறந்து ஜனாதிபதி செயற்படுகின்றார் போல் தென்படுகின்றது.”

- இவ்வாறு அரசின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

“சமகால பிரச்னைகள் தொடர்பில் நேரில் கலந்துரையாட ஜனாதிபதியிடம் அரச பங்காளிக் கட்சியினராகிய நாம் அனுமதி கேட்டிருந் தோம். ஆனால், அதற்கு ஜனாதிபதி இணங்கவில்லை. இந்த மன வேதனையில்தான் ஜனாதிபதி தலைமையில் நடந்த ஆளுங் கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் நாம் கலந்துகொள்ளவில்லை” என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கடந்த 24ஆம் திகதி இரவு நடைபெற்ற ஆளுங்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் 52 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உரப்பிரச்னை உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக விசேட பாராளுமன்றக் குழுக் கூட்டத்துக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் விமல் வீரவன்ஸ உட்பட 52 பேர் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இது தொடர்பில் அமைச்சர் விமலிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் உள்ள சிலர், ஜனாதிபதி தவறான முடிவுகளை எடுக்க வழிசமைக்கின்றனர். ஜனாதிபதி நாட்டின் தலைவர். எனவே, அவர் நாட்டு மக்களின் நலன் கருதியே முடிவுகளை எடுக்க வேண்டும். அதை விடுத்து கட்சி நலன் சார்ந்து முடிவுகளை எடுக்கக் கூடாது. அது இறுதியில் ஆட்சிக்குத்தான் பாதகமாக அமையும்.

விவசாயிகள் இன்று வீதியில் இறங்கிப் போராட யார் காரணம் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

நாட்டு மக்களின் எதிர்ப்புக்களில் இருந்து அரசைப் பாதுகாக்கவே பங்காளிகளாகிய நாம் விரும்புகின்றோம். அரசை வீழ்த்துவது எமது நோக்க மல்ல. இதை ஜனாதிபதி உணர்ந்து செயற்பட வேண்டும்” - என்றார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 21 பேர் கைது!

கொழும்பு, ஒக். 29

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில், நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 21 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 417 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி மேல் மாகாணத்துக்கு உள்நுழைய மற்றும் வெளியேற முற்பட்ட 128 வாகனங்கள் 201 பேருடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. (இ)

# 5 ஆயிரத்து 921 கிலோ கழிவு தேயிலையுடன் ஒருவர் சிக்கினார்!

கம்பஹா, ஒக். 29

கம்பஹா மாவட்டம், வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாபொல பிரதேசத்தில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது, களஞ்சியசாலையொன்றிலிருந்து 5 ஆயிரத்து 921 கிலோகிராம் கழிவு தேயிலையுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வத்தளைப் பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கறுப்பாடுகளை உடனடியாக களையெடுக்காவிடின் ஆபத்து

## அரசிடம் சாகர எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 29

“அரசுக்குள் மறைந்திருக்கும் குழப்பவாதிகளை உடனே வெளியேற்ற வேண்டும். இல்லையேல் அரசுக்குத்தான் ஆபத்து.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையில் கடந்த 24ஆம் திகதி இரவு நடைபெற்ற ஆளுங்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் 52 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான காரணம் என்னவென்று ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஜனாதிபதி தலைமையிலான ஆளுங்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் சிலர் கலந்துகொள்ளவில்லை என்பது உண்மைதான். கூட்டத்துக்குச் சமுகமளிக்காதவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்களைக் கூறியுள்ளனர்.

சில பங்காளிக் கட்சியினரின் காரணங்கள் விசித்திரமாக உள்ளன. இது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை.

எனினும், அரசுக்குள் குழப்பவாதிகள் சிலர் மறைந்திருக்கின்றனர். அவர்களை உடனே வெளியேற்ற வேண்டும்.



இல்லையேல் அரசுக்குத்தான் ஆபத்து. இதைக் கட்சியின் தலைமையிடம் ஏற்கனவே நான் கூறிவைத்துள்ளேன்.

எனவே, ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையும் இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும்” - என்றார். (இ)



## பறக்கும் ‘ஹோவர் பைக்’ ஜப்பானில் அறிமுகமானது!

ரோக்கியோ, ஒக். 29

பறக்கும் சைக்கிளை ஜப்பானின் ஏ. எல். ஐ. தொழில்நுட்ப நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதன் மூலம் உலகின் முதலாவது பறக்கும் வாகன விமானத்தை அந்த நிறுவனம் உருவாக்கியுள்ளது.

ஹோவர் பைக் எனப்படும் பறக்கும் சைக்கிளை ஜப்பானின் உதைபந்தாட்ட வீரர் கெய்சுக் ஹொண்டாவின் ஆதரவுடன் கடந்த புதன்கிழமை விற்பனைக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் விலை 77.7 மில்லியன் யென் - நம் நாட்டு மதிப்பில் 13 கோடியே 68 இலட்சம் ரூபாயாகும். ஹோவர் பைக்குக்கு செல்வந்த நுகர்வோர் தங்களின் சுப்பர் காரை மாற்றிக்கொள்ளவும் முடியும்.

ஹோவர் பைக்கில் 4 பற்றரிகளில் இயங்கும் மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால், அது 100 கி. மீ. வேகத்தில் 40 நிமிடங்கள் பறக்கும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

கறுப்பு, சிவப்பு நிறங்களை கொண்ட இந்த ஹோவர் பைக்கின் மேல் பகுதி மோட்டார்சைக்கிள் போன்ற வடிவமைப்பை கொண்டுள்ளது. இயந்திரம் நிலையாக இறங்கும்போது சறுக்கல்களிலிருந்து பாதுகாப்பளிக்கும்.

ஹோவர் பைக் முன்பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், 2022ஆம் ஆண்டின் முன் அரைப் பகுதியிலேயே பதிவு செய்தவர்களுக்கு ஹோவர் பைக்குகள் வழங்கப்படும். (ஐ)

## மனிதனின் செயல்பாடுகளால் காபனை வெளியிடும் காடுகள்!

லண்டன், ஒக். 29

மனித செயல்பாடுகள், காலநிலை மாற்றங்களால் உலகின் மிகவும் பாதுகாக்கப்பட்ட 10 வனங்கள் காபன் உமிழ்பவையாக மாறியுள்ளன.

யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளங்களில் உள்ள காடுகளில் இருந்து உமிழப்படும் மற்றும் உறிஞ்சப்படும் பூமியை வெப்பமாக்கும் வாயுக்கள் பற்றிய ஆய்வில் இருந்து இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்த பத்து பாதுகாக்கப்பட்ட காடுகளும் கடந்த 20 ஆண்டுகளில் அதிக காபனை வெளியேற்றியுள்ளன. உலக பாரம்பரிய காடுகள் ஜேர்மனி நாட்டின் அளவைவிட அதிக பரப்பை கொண்டன. உலகம் முழுவதும் 257 பாரம்பரிய



காடுகளின் வலையமைப்பும் அதே ஆராய்ச்சியை வெளிப்படுத்தியது.

ஒவ்வோர் ஆண்டும் 19 கோடி தொன் காபனை வளிமண்டலத்தில் இருந்து காடுகள் அகற்றின. ஆனால், காடுகள் சட்டவிரோத மரம் வெட்டல், விவசாயத்தை விரிவுபடுத்தல் காட்டு தீ போன்ற அழுத்தங்களை எதிர்கொள்கின்றன. இவை காலநிலை மாற்றத்தால் அதிகம் உருவாகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சீன ஏவுகணை சோதனை மிகவும் கவலைக்குரியது!



வாஷிங்டன், ஒக். 29

சீனா ஹைபர்சோனிக் ஏவுகணை சோதனை ஸ்புட்னிக் தருணத்தை நினைவுபடுத்துவதாகத் தெரிகிறது என்று அமெரிக்க கூட்டுப் படைகளின் உயர் தளபதியான ஜெனரல் மார்க் மிலி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா - சோவியத் ரஷ்யா இடையே பனிப்போர் பந்தயத்தை தூண்டியது ரஷ்யாவின் ஸ்புட்னிக் செயற்கை கோள் ஏவுதலாகும். இதனையே அவர் இப்போது சீனாவின் ஹைபர் சொனிக் ஏவுகணை பரிசோதனையுடன் ஒப்பிட்டு பேசியுள்ளார்.

ப்ளூம்பெர்க் ஊடகத்திடம் பேசிய ஜெனரல் மார்க் மிலி, “சீனாவின் இராணுவம் வேகமாக விரிவடைந்து வருகிறது”, என்றார்.

இந்த மாத ஆரம்பத்தில் சீனாவின் ஏவுகணை சோதனை அமெரிக்க இராணுவத்தை ஆச்சரியப்படுத்தியதாக பினான்சியல் ரைம்ஸ் செய்தி வெளியிட்டது.

எனினும், எந்த ஏவுகணை சோதனையையும் தாம் செய்யவில்லை என்றும், மாறாக அது ஒரு விண்கலம் என்றும் சீனா கூறியுள்ளது.

(ஐ)



## ரஷ்யாவின் ஒருநாளில் 40,096 தொற்றாளர்!

*1159 பேர் உயிரிழப்பு*

மொஸ்கோ, ஒக். 29

ரஷ்யாவில் கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்றும், பலியும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ரஷ்யாவில் நேற்று காலை வலையான 24 மணி நேரத்தில் 40 ஆயிரத்து 96 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 159 பேர் பலியாகினர். இதுவரை ரஷ்யாவில் 85 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸுக்கு எதிராக முதல் முதலாகத் தடுப்பூசியை அறிமுகம் செய்த நாடு ரஷ்யா. ஆனால், ரஷ்யாவில் ஸ்புட்னிக் - V தடுப்பூசிக்கு வெளிநாடுகளில் மட்டுமல்லாது உள்நாட்டிலும் தட்டுப்பாடு நிலவுகிறது. ஸ்புட்னிக் தடுப்பூசியின் முதல் தவணையைப் போட்டுக்கொண்ட சிலர், இரண்டாவது தவணை தடுப்பூசி போட முடியாமல் காத்திருக்கின்றனர்.

பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவித்தபோதிலும் ரஷ்யாவில் கொரோனா பரவல் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதனால் ரஷ்யா தலைநகர் மொஸ்கோவில் முதல்கட்டமாக அடுத்த 11 நாட்களுக்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அவசிய சேவைகள் தவிர, மற்ற அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளது. மக்கள் அவசியமின்றி வெளியே நடமாடவும், பயணம் செய்யவும், தடை விதிக்கப்பட்டுள்ளது.(ஐ)

### இந்தியாவின் உத்தரபிரதேசத்தில்

## பாகிஸ்தானின் வெற்றியை கொண்டாடிய மூவர் கைது!

புதுடில்லி, ஒக். 29

உலகக்கிண்ண தொடரில் இந்தியாவை பாகிஸ்தான் வென்றதைக் கொண்டாடினர் என்றுகூறி மூன்று மாணவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காஷ்மீரை சேர்ந்தவர்களே இவ்வாறு வட இந்திய மாநிலமான உத்தர பிரதேசத்தின் ஆக்ரா நகரில் வைத்து கடந்த புதன்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

போட்டியின்போது அவர்கள் இந்திய எதிர்ப்பு, பாகிஸ்தான் ஆதரவு கோஷங்களை எழுப்பினர் என்றும் பகைமை மற்றும் சைபர் பயங்கர வாதத்தை ஊக்குவித்தனர் எனவும் அவர்கள் மீது பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

முன்னதாக பாகிஸ்தான் வீரர்களை இவர்கள் ஊக்குவிக்கின்றனர் என்று கூறி அவர்கள் கல்விகற்ற கல்லூரி அவர்களை இடைநீக்கம் செய்தது. ஆனால், ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் சில உறுப்பினர்களின் முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று முன்தினம் புதன்கிழமை அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## 2025ஆம் ஆண்டு வரை குறைவாக சாப்பிடுங்கள்!

### மக்களுக்கு வடகொரிய தலைவர் அறிவிப்பு

பியோங்யொங், ஒக். 29

உணவுப் பஞ்சத்தால் 2025 ஆம் ஆண்டு வரை குறைவாக சாப்பிட மக்களுக்கு வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் அறிவுறுத்தியுள்ளார்.

வடகொரியாவில் கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் பயிர்கள் சேதமடைந்ததாலும் தற்போது விவசாயத் துறை போதுமான உற்பத்தியை நிறைவேற்றத் தவறியதாலும் இந் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் கொரோனா பரவல் காரணமாக அண்டை நாட்டின் எல்லைகளையும் வடகொரியா மூடியுள்ளது. இதனால் மக்கள் உணவு கிடைக்காமல் தவித்து வருகின்றனர். உணவுப் பொருள்



களுக்கு பெரும் தேவை இருப்பதால் அவற்றின் விலை அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்நிலையில், உணவுப் பஞ்சத்தால் மக்கள் குறைவாக சாப்பிட வேண்டும் என்று வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அறிவுறுத்தியுள்ளார்.

2025ஆம் ஆண்டு வரை உணவுப் பஞ்சம் இருக்கும் என்றும் அரசுத் தரப்பு கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதுபோல சீனா உள்ளிட்ட அண்டை நாடுகளுடனான வர்த்தகமும் 2025 வரை மீண்டும் தொடங்க வாய்ப்பில்லை என்றே கூறப்படுகிறது. எனினும் இந்த உணவுப் பஞ்சத்தை அரசு சமாளித்து மீண்டு வரும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதையடுத்து, வடகொரிய அதிபரின் இந்தக் கருத்துக்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

(ஐ)

# இரத்தம் தோய்ந்த நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஒக். 29

கொழும்பு, பிலியந்தலை தும்போவில பிரதேசத்திலுள்ள வீடொன்றில், தனிமையில் வசித்து வந்த குடும்பஸ்தர் ஒருவர், நேற்றுக் காலை இரத்தம் தோய்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பிலியந்தலைப் பொலிஸார் தெரிவித்தார்.

சரத் தந்தநாராயண என்ற 60 வயது நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

குறித்த நபரின் தொலைபேசி இலக்கம் செயலிழந்து காணப்பட்டதால் அவருடன் பணியாற்றும் சக ஊழியர் ஒருவர், அவரின் வீட்டுக்குச் சென்று கதவைத் திறந்துப் பார்த்தபோது அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நபர் பல்வேறு நோய் நிலைமைகளால் பாதிக்கப்பட்டிருந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ)

# பஸ் விபத்தில் 13 பேர் காயம்

மாத்தளை, ஒக். 29

மாத்தளையிலிருந்து செலகம வரை பயணித்த தனியார் பஸ், மாத்தளை - கொலென்னேவத்த பகுதியில் விபத்துக்குள்ளானதில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பகல் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு காயமடைந்தவர்கள் மாத்தளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களுள் 3 வயது குழந்தை ஒன்றும் அடங்குகின்றது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பஸ், மற்றுமொரு வாகனத்துக்கு இடமளித்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மஹ வெல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)



# அரச நிறுவனங்களுக்கு வாகனங்கள் கையளிப்பு

கொழும்பு, ஒக். 29

துறைசார் அலுவல்களுக்குத் தேவையான அம்புலன்ஸ் வாகனங்கள் 50, தண்ணீர் பவுசர்கள் 52, டபிள் கப் ரக வாகனங்கள் 62 உள்ளிட்ட 164 வாகங்களை, உரிய அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்படி, சுகாதார அமைச்சு மற்றும் சுவசெரிய அம்புலன்ஸ் சேவைகளுக்கு 50 அம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டதோடு, வனஜீவராசிகள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு, தண்ணீர் பவுசர்கள் மற்றும் டபள் கப் ரக வாகனங்கள் கையளிக்கப்பட்டன.

அமைச்சர்களாக ஜனக பண்டார தென்னகோன், கெஹலிய ரம்புக்வெல, சி.பீ.ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல உள்ளிட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்யப்பட்ட 150 மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸ் திணைக்களத் திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வும், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள்கள், இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் போக்குவரத்துச் சேவைக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த மோட்டார் சைக்கிள்கள், ஜனாதிபதியால் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மற்றும் பொலிஸ்மா அதிபர் சி.டீ.விக்கிரமரத்ன ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சுகியாமா அக்கிரா மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நாட்டு மக்களை படுகுழிக்குள் தள்ளியுள்ளது ராஜபக்ஷ அரசு

## மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக். 29**

**'ராஜபக்ஷ அரசானது, நாட்டு மக்களைப் படுகுழிக்குள் தள்ளியுள்ளதுடன் வரிசையில் நிற்கும் நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.'**



- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இந்த அரசின் ஆட்சியில், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன.

விவசாயிகள் வீதியில் இறங்கிப் போராடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏற்றுமதி முற்றுமுழுதாக அழிந்துள்ளது.

சோமாலியா போன்று எமது நாட்டையும் மாற்றியுள்ள இந்த அரசு, தற்போது விவசாயிகள் விவசாயச் செய்கையை மேற்கொள்ள முடியாதளவு நாட்டை நாசமாக்கியுள்ளது' - என்றார்.

(இ)



பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் 1993ஆம் ஆண்டு தொடக்கம் 28 ஆண்டுகள் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி இளைப்பாறுகை பெற்ற இராசதுரை ஸ்ரீகாந்தனின் அவர்களின் மணிவிழா நேற்று கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

# யாழில் ஒற்றுமைக்கான மிதிவண்டி ஓட்ட நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். இந்திய துணைத் தூதரகமானது, சர்தார் வல்லபாய் படேலின் 146 ஆவது பிறந்த நாள் மற்றும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டு தினத்தை யொட்டி "ஆசாதிகா அம்ரித்ம ஹோற்சவ்" கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நேற்று ஒற்றுமைக்கான மிதிவண்டி ஓட்ட நிகழ்வை நடத்தியது.

இதன்போது யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் அதிகாரிகள், தூதரகத்திலிருந்து மிதிவண்டியில் பயணித்து நாவற்குழி பகுதியில் சிவபூமி அறக்கட்டளையின் கீழ் அமைந்துள்ள சிவபூமி (தட்சணாமூர்த்தி) கோயிலை அடைந்தனர்.

அங்கு சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜை வரவேற்றார்.

தொடர்ந்து 'உலகம் ஒரு குடும்பம் எனும் வசுதைவ குடும்பகத்தின்' வழிகாட்டுதலின் பேரில், இந்தியத் துணைத் தூதுவர், துணைத் தூதரகத்தின் அதிகாரிகளுடன் இணைந்து இந்திய மற்றும் இலங்கை மக்களின் நல்வாழ்வுக்காக சிறப்பு வழிபாடு செய்தார். (இ - 03)








ஈழநாடு



## மரண அறிவித்தல்கள்

பிறப்பு 14 - 11 - 1963



இறப்பு 24 - 10 - 2021

### செல்வி சந்திரிகா சிவநாயகம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Balham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரிகா சிவநாயகம் அவர்கள் 24.10.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான Dr. சிவநாயகம் - லங்காதேவி தம்பதியரின் அன்பு மகளும், கிரிதரன்(சுவிஸ், இலங்கை), சுபத்ரிகா அசோகன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவீன்(கனடா) அவர்களின் பெரியம்மாவும், தரணிகா, அசோகன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சுபத்ரிகா(சகோதரி)**
+16472983234

தகவல்:
**குடும்பத்தினர்.**

பிறப்பு 08 - 10 - 1924



இறப்பு 27 - 10 - 2021

### நல்லதம்பி சின்னையா

**"என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் இயேசு"**

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி சின்னையா அவர்கள் 27.10.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற நல்லதம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிவசம்பு - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், ரவீந்திரராஜன், ரதிவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்ற அனுசியா, Pastor. போல்அம்பி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தமோதிரம்பிள்ளை, சீனித்தம்பி, முத்தையா, தங்கம்மா, நாகம்மா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜீவகரன், லலிதா, மிதுன், கிரன், டினேஷ், துஷாரா, மிதுஷன், டினோஷா, லிடியா ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெனிஷன், ஜெனோஷன், ஜெய்டன், லிவாய் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**ரவி (மகன்)**
+4915788056622

தகவல்:
**குடும்பத்தினர்.**

# இறுதியில் இலங்கையே இல்லாமல்போகும் நிலை

## ஜனாதிபதியின் போக்கைக் கண்டிக்கின்றார் நளின்



கொழும்பு, ஒக். 29

"நாட்டில் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வால் நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி செயலணிக் குழுவால், 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்பது மக்களுக்கு இல்லை என்றாலும் அது நடைமுறைப்படுத்தப்படும். இறுதியில் நாடும் இல்லாமல் போகும் நிலைமை உருவாகும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குருநாகலில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2020ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது தான் நாட்டு மக்களுக்கு சிறப்பாக செய்யப் போகின்றார். அதற்கு இதுதான் சரியான நேரம் என அவர் உணர்ந்துள்ளார்.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசைக் கவிழ்க்க கோட்டாபய ராஜபக்ஷ உட்பட இந்தக் குழுவினர் இனவாதம் மற்றும் மதவாதத்தைப் பயன்படுத்தினர். இனங்களுக்கிடையில் ஆத்திரத்தைத் தூண்டியதுடன் சூழ்ச்சி மற்றும் பயங்கரவாதத்தை ஏற்படுத்தினர். இவற்றைப் பயன்படுத்தியே 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசைக் கவிழ்த்தனர்.

இரண்டு வருடங்களின் பின்னர் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நித்திரையில் இருந்து விழித்தவர் போல், கலகொடை அத்தே ஞானசார தேரர் தலைமையில் ஒரே நாடு ஒரே சட்டத்தை உருவாக்க ஜனாதிபதி செயலணிக் குழுவை நியமித்துள்ளார்.

நாட்டில் உள்ள படித்த புத்திசாலி மக்களுக்கு இதனை நாங்கள் விளங்கப்படுத்த வேண்டியதில்லை. எதற்காகத் தயாராகி வருகின்றனர்? நாட்டை எங்கு கொண்டு செல்லப் போகின்றனர்? கடந்த இரண்டு ஆண்டுகளில் "ஒரு நாடு - ஒரு சட்டம்" அமுல்படுத்தப்பட்டதை நாங்கள் நன்றாகப் பார்த்தோம். ஜனாதிபதி இவ்வாறு நாட்டை எந்தத் திசை நோக்கி கொண்டு செல்கின்றார் என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

கடந்த காலத்தில் நியமித்த ஜனாதிபதி செயலணிகளை நோக்கிப் பார்க்கும்போது, அவை பற்றி சிரித்தாலும் தற்போது நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி செயலணிக்குழுவால், "ஒரே நாடு - ஒரே சட்டம்" என்பது மக்களுக்கு இல்லை என்றாலும் அது நடைமுறைப்படுத்தப்படும். இறுதியில் நாடும் இல்லாமல் போகும் நிலைமை உருவாகும்" - என்றார்.

## ரயில் பயணச்சீட்டு வழங்கல் குறித்து இன்று ஆராய்வு

கொழும்பு, ஒக். 29

ரயில் பயணிகளுக்கான பயணச்சீட்டு வழங்குவதற்கான கோரிக்கையை இன்று நடைபெறவுள்ள கோவிட் கட்டுப்பாட்டு குழுவுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான அனுமதி கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

மேலும், மாகாணங்களுக்கிடையிலான ரயில் சேவைகளுக்கும் அனுமதியைப் பெற எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், ரயில் பருவகால சீட்டை வைத்திருப்பவர்கள் மாத்திரம் ரயிலில் பயணிக்க அனுமதிக்கும் முடிவு கோவிட் கட்டுப்பாட்டுக் குழுவினால் எடுக்கப்பட்டது. அதை மாற்றும் அதிகாரம் அந்த குழுக்கே உள்ளதாகவும் ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர மேலும் கூறினார்.

## களனி பல்கலைக்கழக வேந்தர் காலமானார்!



கொழும்பு, ஒக். 29

களனி பல்கலைக்கழகத்தின் வேந்தரும் கொழும்பு மற்றும் சிலாபத்தின் தலைமை நாயக்க தேரருமான கலாநிதி வெலமிட்டியாவே குசலதம்ம தேரர் காலமானார்.

கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தேரர் இயற்கை எய்தினார்.

84 வயதான அவர், பௌத்த கல்வி மத்திய நிலையமான பேலியகொடை வித்தியாலங்கார பிரிவெனாவின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

மிக நீண்டகாலம் சமயம் மற்றும் சமூக சேவைகளில் கலாநிதி வெலமிட்டியாவே குசலதம்ம தேரர் ஈடுபட்டுள்ளார். (இ)





பண்டத்தரிப்பு - கலட்டி - பணிப்புலம் ஸ்ரீ ஹரிஹரசுதன் ஐயப்பன் தேவஸ்தான கும்பாபிஷேக பெருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றவேளை...!

## சுதந்திர...

அவரின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி சில தினங்களுக்கு முன்னர் அதிவிசேட வர்த்தமானி மூலம் ஒரு நாடு ஒரு சட்டம் என்பதனை அமுல்படுத்துவதற்காக 13 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளார். இந்த குழுவின் தலைவராக வண. ஞானசார தேரரை நியமித்துள்ளார். இவர் ஏற்கனவே நீதிமன்றத்தை அவமதித்ததன் காரணமாக தண்டிக்கப்பட்டு பின்னர் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு வெளியில் வந்தவர்.

எத்தனையோ சர்ச்சைகளில் ஈடுபட்டவர். அப்படிப்பட்ட ஒருவரை தலைவராக நியமித்து ஒரு நாடு ஒரு சட்டம் என வலியுறுத்த முடியாது. இக்குழுவில் பெயரளவில் கூட ஒரு தமிழர் இல்லை. ஒரு சில முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அப்படி என்றால் இந்நாடு தமிழர்களுக்கு சொந்தமில்லையா? தமிழர்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லையா? என்கின்ற கேள்வியை இலங்கை ஜனாதிபதியைப் பார்த்துக் கேட்கின்றோம்.

ஓர் இனத்தவர்கள் இருக்கும் நாட்டில் ஒரே நாடு ஒரே சட்டம் பொருத்தம். ஆனால், இலங்கையில் பல்வேறு இனத்தவர்கள், பல்வேறு மதத்தவர்கள் என பல்லின மக்கள் வாழும் இலங்கையில் ஒரு நாடு ஒரு சட்டம் என்பதனை அமுல்படுத்தப் போகிறீர்களானால் அது பௌத்தத்தை மட்டுமே சார்ந்ததாக அமையும். இதனால், தமிழர்களை இந்த நாட்டை விட்டு கழுத்தில் பிடித்து தள்ளுவதையே உணர்கிறோம்.

இதனால், இந்த நாட்டின் பிரஜைகள் இல்லை என்பதனை நாம் அறிவிப்பதற்கு தடையில்லை என்பதுடன் அந்நிலைமைக்கு எம்மைத் தள்ளிவிடுகின்றீர்கள். இதன் மூலம் எங்களை ஒரு தனிநாட்டை, சுதந்திர தமிழீழத்தை உருவாக்க விரும்புகிறீர்களா என்ற கேள்வியை கேட்க விரும்புகின்றோம். நீங்கள் இதைதான் செய்வதற்கு எம்மைத் தூண்டுவீர்கள் என்றால் அதனையும் செய்வதற்கு நாம் தயாராக உள்ளோம்.

எனவே, ஏமாற்று வேலையாக அமையும் இந்த ஒரு நாடு ஒரு சட்டம் என்பதனை ஜனாதிபதி அவர்கள் மீளப்பெற வேண்டும். இந்த குழுவைக் கலைக்க வேண்டும், இந்த எண்ணப்பாடுகளை கைவிட வேண்டும். புதிய அரசமைப்பு உருவாவதற்கு முன்னரே, இவ்வளவு அவசர அவசரமான கோரிக்கைகள் ஏன் எழுகிறது.

ஆகவே, சர்வதேசத்தை பார்த்து சொல்ல விரும்புவது, தமிழினத்தை மதிக்கப்படமால் அவமதிக்கும் செயல்பாட்டிற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என சர்வதேசம்தான் கூறவேண்டும். எனவே நாங்கள் பிரிந்து செல்வதை கட்டாயப்படுத்தினால் அதைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதனையும் ஜனாதிபதிக்கும் ஆட்சியாளர்களுக்கும் கூறிக் கொள்ள விரும்புகின்றோம் - என்றார். (ஐ)

## சி.ஐ.டிக்கு...

- உயிர்த்த ஞாயிறு தினமன்று நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்கள் தொடர்பான விடயங்களை முன்னிலைப்படுத்தி அண்மையில் இடம்பெற்ற காணொளி கலந்துரையாடலின்போது வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக அருட்தந்தை சிறில் காமினி நேற்று அழைக்கப்பட்டிருந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

எனினும், ஒரு வார கால அவகாசத்தை வழங்குமாறு அருட்தந்தை கோரியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான இணையத்தள விவாதம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் அறிக்கை சமர்ப்பித்தது.

இந்தக் கலந்துரையாடலில் தாம் தொடர்பில் பொய்யான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன என்று அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே செய்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ)

## பார்த்தீபனிடம்...

விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

விசாரணையின் பின்னர், செய்தியாளர்களை சந்தித்த பார்த்தீபன் விசாரணையில் இடம்பெற்றவை தொடர்பில் விவரித்தார்.

இதன்போது தன்னிடம், மாநகர காவல் படையினரின் சீருடை யாருடைய அனுமதியில் அறிமுகப்படுத்தப்பட்டது? யார் அறிமுகப்படுத்தினார்கள்?, சீருடைக்கு ஏன் இந்த நிறம் தெரிவு செய்யப்பட்டது போன்ற பல கேள்விகளை பயங்கரவாத தடுப்பு பொலிஸார் கேட்டனர்.

சீருடையின் வடிவமைப்பு முழுமையாக கொழும்பு மாநகர சபையின் முடிவை தழுவியே எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தேன். தொடர்ந்தும் அது தொடர்பில் பல கேள்விகளை எழுப்பினர்.

இறுதியில், மேலதிக விசாரணைகளுக்காக தேவைப்பட்டால் கொழும்புக்கு வரவேண்டிய நிலைமை ஏற்படுமென்றும், சீருடை விவகாரங்கள் தொடர்பான விசாரணைகள் முடிந்துவிட்டன. ஆனால், உங்களுடைய முகப்புத்தகத்தில் போடப்பட்ட பதிவுகள் தொடர்பாக விசாரணைகள் சில வேளைகளில் உங்கள்மீது இருக்கலாம் எனவும் கூறினர் - என்றார். (ஐ)

## வவுனியாவில்...

பரிசோதனையிலேயே இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் - 17 பேர், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவர் என வவுனியா மாவட்டத்தில் 18 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 03 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 02 பேர், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் ஒருவர், யாழ். போதனா மருத்துவமனையில் ஒருவர் என யாழ். மாவட்டத்தில் 07 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மல்லாவி ஆதார மருத்துவமனையில் 03 பேரும், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் 2 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ)

## 540 பேருக்கு...

ணிக்கை 5 இலட்சத்து 38 ஆயிரத்து 860 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 7 ஆயிரத்து 487 பேர் குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 11 ஆயிரத்து 863 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## பேருந்து,...

டுள்ளது - இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.


கண்டியில் நேற்று காலை செய்தியாளர்களிடம் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கு பேருந்துகள் தேவையில்லை எனில், பாடசாலை அதிபர்கள், பேருந்து சாலை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க முடியும்.

பருவகாலச் சீட்டு இல்லாதவர்களை ரயிலில் பயணிக்க அனுமதிப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும், இது குறித்து கோவிட்-19 செயலணியுடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். (ஐ)

# செயலணிக்கு ஞானசாரர் நியமனம் நாட்டின் நற்பெயருக்கு களங்கம்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 29

ஆட்சியை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கோஷத்தை நடைமுறைப் படுத்துவதற்கு விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட செயலணிக்கு, நாட்டில் இனங்களுக்கிடையிலான வன்செயல்களைத் தொடர்ச்சியாகத் தூண்டி வருபவரும், நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாக தண்டனை விதிக்கப்பட்டு, சிறைவாசம் அனுபவித்தவரும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவினால் அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டவருமான பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மிகவும் வன்மையாக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர்,அவர் இதனைச் சில ஊடகங்களுக்குத் தெரிவித்தார். இது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது,

"எவருக்குமே அறவே புரியாத, எந்தவிதமான தெளிவுமற்ற 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற விவகாரம் பற்றி பல்லின சமூகத்தவர் வாழும் இலங்கை நாட்டில் மக்கள் மத்தியிலும் பொது வெளியிலும் தாறுமாறான கருத்துக்கள் பரவலாக நிலவிவரும் நிலையிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான நோக்கம் ஆட்சிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதா என்ற பலத்த சந்தேகம் வலுப்பெற்றுவரும் நிலையிலும், இன முறுகலை தொடர்ச்சியாகக் தோற்றுவித்து, வன்செயல்களைத் தூண்டி வருபவரும், குறிப்பாக இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும், அல்லாஹ்வையும் பகிரங்கமாகவே நிந்தித்து வருபவரும், பொதுவாக பௌத்தம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் மீது பகிரங்கமாகத் தமது வெறுப்புணர்வை கொட்டித் தீர்த்து வருபவருமான ஞானசார தேரரை பிரஸ்தாப குழுவுக்கு தலைவராக நியமித்திருப்பது நாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற இனங்களுக்கிடையிலான துருவப்படுத்தலை மேலும் மோசமான நிலைமைக்கே இட்டுச்செல்லும்.

அரசாங்கத்தின் இச்செயல்பாடானது நாட்டில் அமைதியின்மை தொடர்வதற்கும் இனங்களுக்கிடையிலான மோதல்கள் அடிக்கடி நிகழ்வதற்கும் தூபமிடும் செயலாகவே அமைந்துள்ளதாகத் திட்டவட்டமாக் கருதலாம். ஒரு சாராரைத் திருப்திப் படுத்துவதற்காகவே இவ்வாறு நடக்கின்றதென நம்புவதோடு, இதன் பின்னணியில் மறைகரங்களும், வெளிச்சக்திகளும் இருக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் மேலெழுவதும் இயல்பானதே. அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் மத்தியில் அதிருப்தி அதிகரித்து,அதன் செல்வாக்கு சரிந்து வரும் காரணத்தினால், அரசாங்கத்தின் பலவீனத்தை மூடிமறைப்பதற்கும் மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்கும் இவ்வாறான கீழ்த்தரமான அணுகுமுறைகள் கையாளப்பட்டு வருவது கண்கூடாகும்.

அத்துடன் பிரஸ்தாப செயலணியில் தமிழ் மக்களின் சார்பிலோ, கிறிஸ்தவர்கள் சார்பிலோ எவருமே உள்வாங்கப்படாததும் ஒரு பாரிய குறைபாடாகும். இலங்கை முஸ்லிம்களின் அதிகபட்ச ஆணையை பெற்ற அரசியல் கட்சியின் தலைவர் என்ற முறையிலும், நாட்டில் வாழும் சகல இனங்களுக்கு இடையிலும் ஒற்றுமையும் நல்லுணர்வும் நிலவ வேண்டும் என்று நேசிக்கும் பிரஜை என்ற முறையிலும் எனது கண்டனத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் வன்மையாகப் பதிவு செய்கின்றேன்.

அரசாங்கத்தின் குறுகிய நோக்கம் கொண்ட இந்த நடவடிக்கையானது குறிப்பாக முஸ்லிம் நாடுகள் மத்தியிலும், பொதுவாக சமாதானத்தை விரும்பும் உலக நாடுகள் மத்தியிலும் இலங்கை ஏற்கனவே வெறுப்பை சம்பாதித்துள்ள நிலையில், நாட்டின் நற்பெயருக்கு பாரிய களங்கத்தை ஏற்படுத்தும் என் பதில் ஐயமில்லை" என ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## திருமலை...

துள்ளது.

தற்போதைய குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தாக்கத்தால் நாட்டை சூழவுள்ள கடற்பரப்பில் மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடலோரப் பகுதிகளில் மணிக்கு 60 -65 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை ஊடாக புத்தளம் வரையிலும் காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் திணைக்களம் எச்சரித்துள்ளது.

திடீரென பலத்த காற்று, கொந்தளிப்பான கடல், இடியுடன் கூடிய மழையும் எதிர்பார்க்கப்படுவதால் கடற்றொழிலாளர்கள், கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## மேலும் 22...

களில் பெண் ஒருவரும், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 3 ஆண்களும், 3 பெண்களுமாக 6 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 6 ஆண்களும் 9 பெண்களுமாக 15 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 696 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## கோட்டாபயவுக்கு...

இலங்கையில் ஒட்டுமொத்த தமிழினத்தையும் வேரோடு அழிக்கும் கொடூரப் போரை நடத்திய பேரினவாதி கோட்டாபயவின் பிரிட்டன் வருகையைத் தாம் கடுமையாக எதிர்ப்பதாக போராட்ட ஏற்பாட்டாளர்கள் துண்டுப்பிரசுரங்கள் மூலம் அறிவித்துள்ளனர்.

ஸ்கொட்லாந்து நகரில் நடைபெறும் போராட்டத்தில் பங்கேற்பதற்காக லண்டனிலிருந்து கட்டணமின்றி பஸ் சேவை இடம்பெறவுள்ளது.

லண்டனிலிருந்து நாளைமறுதினம் 31ஆம் திகதி (ஞாயிறு) இரவு 8 மணியளவில் இலவச பஸ்கள் ஸ்கொட்லாந்து நகரை நோக்கிப் புறப்படவுள்ளன.

இந்தப் போராட்டத்தில் புலம்பெயர் தமிழர்கள் ஓரணியில் திரண்டு பங்கேற்க வேண்டும் என்று பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (அ-இ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையை 7 விக்கெட்டால் வென்றது அவுஸ்திரேலியா!



டுபாய், ஒக். 29

வோர்ணரின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 7 விக்கெட்களால் இலங்கை அணியை வெற்றிகொண்டது அவுஸ்திரேலியா.

உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் 12 சுற்றில் நேற்று டுபாயில் நடந்த குழு 1இற்கான போட்டியில் இலங்கை - அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. எனவே, இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 154 ஓட்டங்களை எடுத்தது இலங்கை அணி.

155 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துரத்தலைத் தொடங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்கம் கொடுத்த டேவிட் வோர்ணர் அபாரமாக ஆடினார். அவர் 42 பந்துகளில் 10 பௌண்ட்ரிகளை விளாசி 65 ஓட்டங்களை குவித்தார்.

இதன்மூலம், வோர்ணர் தான் ஒரு சிறந்த போராளி என்பதை மீண்டும் நிரூபித்தார். ஐ. பி. எல். தொடரில் சரியாக விளையாடமையால் ஹைதராபாத் அணியிலிருந்து அவர் விலக்கப்பட்டார். இந்நிலையில், வோர்ணர் இந்தப் போட்டியின்மூலம் தன்னை நிரூபித்துள்ளார்.

15ஆவது ஓவரில் ஆட்டமிழந்தபோது அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு 25 ஓட்டங்களே தேவைப்பட்டது. ஆனால், இலங்கையின் பந்துவீச்சாளர்கள் போட்டியை தம் வசமாக்க கடுமையாக முயன்றபோதும் அதில் அவர்கள் வெற்றி பெறவில்லை. வோர்ணரும் பின்ஞ்சும் அபாரமாக விளையாடினர். பின்ஞ் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 37 ஓட்டங்களை சேர்த்தார்.

ஸ்ரீவன் ஸ்மித் 28, ஸ்ரொய்னிஸ் 16 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இறுதியில் 17 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கான 155 ஓட்டங்களைப் பெற்றது அவுஸ்திரேலிய அணி.

முன்னதாக ஆடிய இலங்கை அணியின் ஆரம்ப விக்கெட்கள் தொடக்கத்திலேயே சரிந்தன. ஆனாலும், அசலங்க (35 ஓட்டங்கள்), குசல் பெரேரா (35), ஓட்டங்களை எடுக்க 2 விக்கெட் இழப்புக்கு 78 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஆனால், அடம் சம்பா இலங்கை அணியின்மீது கடும் அழுத்தத்தை ஏற்படுத்தினார். அவர், 4 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்.

சம்பாவின் பந்துவீச்சை சமாளிக்க மாட்டாமல் இலங்கை வீரர்கள் தடுமாறினர். எனினும், பானுக ராஜபக்ஷ 26 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் சேர்த்தார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர்.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் அடம் சம்பா, மிற்சல் ஸ்ரார்க், பட் கம்மின்ஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களைக் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக அடம் சம்பா தெரிவானார். (ஐ)



## ஐ. பி. எல்லின் பழைய அணிகள் 4 வீரர்களை தக்கவைக்கலாம்!

சென்னை, ஒக். 29

ஐ. பி. எல். போட்டியில் இரு புதிய அணிகள் சேர்ந்ததையடுத்து ஏலத்துக்கு முன்னர், பழைய 8 அணிகளும் 4 வீரர்களைத் தக்கவைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ. பி. எல். போட்டியில் இரு அணிகள் புதிதாகச் சேர்க் கப்பட்டுள்ளன. அடுத்த வருடம் முதல் லக்னோ, அஹமதாபாத் நகரங்களை அடிப்படையாகக் கொண்டு இரு புதிய அணிகள் இணைகின்றன. இதில் லக்னோ அணியை, கொல்கத்தாவைச் சேர்ந்த தொழிலதிபரான சஞ்சீவ் கோயங்காவின் ஆர். பி. எஸ். ஜி. குழுமம் 7,090 கோடி இந்திய ரூபாய்க்கு வாங்கியது. அஹமதாபாத் அணி யைச் சர்வதேசப் பங்கு முதலீட்டு நிறுவனமான சி. வி. சி. கப்பிட்டல் 5,600 கோடி ரூபாய்க்கு சொந்தமாக்கியது. திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் இது முடிவானது. ஆர். பி. எஸ். ஜி. குழுமம் ஏற்கெனவே கடந்த 2016-17 காலகட்டத்தில் ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட் அணி உரிமையாளராக இருந்தது.

இந்நிலையில் ஐ. பி. எல். 2022 போட்டியில் விளையாடும் வீரர்களுக்கான மெகா ஏலம் விரைவில் நடைபெறவுள்ளது. இதற்காக வீரர்களைத் தக்கவைப்பது தொடர்பான விவாதத்தை அணிகளுடன் நடத்திய இந்திய கிரிக்கெட் சபை அணிகளுக்கு தெரிவித்த விடயங்கள் வருமாறு,

இதன் அடிப்படையில் பழைய 8 அணிகளும் 4 வீரர்களைத் தக்கவைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றன. ஏலத்துக்கு முன்பு உள்ள வீரர்களின் பட்டியலில் இருந்து 3 வீரர்களை தேர்வு செய்துகொள்ள இரு புதிய அணிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் ஏலத்தில் பங்கேற்கும் அணிகளுக்கு 90 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

பழைய 8 அணிகள் தக்கவைக்கும் 4 வீரர்களில் மூவர் இந்தியராகவும் ஒருவர் வெளிநாட்டு வீரராகவும் இருக்க லாம். அல்லது தலா இரு வெளிநாட்டு, இந்திய வீரர் களாகவும் இருக்கலாம்.

ஒரு தொகைக்கு ஒப்பந்தம் செய்த வீரருக்கு பதிலாக அதே தொகைக்கு இன்னொரு வீரரை தெரிவு செய்யும் ஆர். டி. எம். நடைமுறை நீக்கப்பட்டுள்ளது.

இரு புதிய அணிகள் தேர்வு செய்யும் மூன்று வீரர்களில் இருவர் இந்தியராகவும் ஒருவர் வெளிநாட்டு வீரராகவும் இருக்கலாம்.

மேலும் ஓர் அணி எந்த வீரரைத் தக்கவைத்தாலும் அந்த வீரருக்கு அணி மீதோ வழங்கப்படும் சம்பளத்தின் மீதோ அதிருப்தி இருந்தால் வாய்ப்பை நிராகரித்து ஏலத் தில் பங்கேற்க முடியும். 8 அணிகளும் நவம்பர் இறுதிக் குள் தக்கவைக்கும் வீரர்களின் பெயர்களை அறிவிக்க வேண்டும்.

ஏலத்துக்கு முன்பு வீரர்களைத் தக்கவைப்பது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை இந்திய கிரிக்கெட் சபை விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலனகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் : டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-முதினா,நண்பனே திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10

**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்